இந்த இடத்தில் விளம்பரம் செய்ய
அழையுங்கள் 416 841 9600

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
வீடு விற்பனை முகவர்
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX
Realton Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANE COVERAGE
AUTO, HOME, BUSINESS
20+ ஆண்டுகள் அனுபவம் பெற்ற நம்பகமான காப்புறுதி முகவர்! சரியான காப்புறுதி! குறைந்த காப்புறுதி கட்டணம்!
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710
AAXEL

மலர்:- 31, 09 ஆகஸ்ட் 2024 இதழ்:- 10

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com

GT Brokers
Protect You & Your Family
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Life & Health Insurance Advisor
Dir: 416 528 1407
gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Tel: 905-201-9977 Fax: 905-201-9229
Suite 205, 7 Eastvale Dr. Markham, ON. L3S 4N8

## போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்! உறவுகளே! ஆகஸ்ட் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

## அரங்கம் நிறைந்த "தமிழும் இசையும்" நிகழ்வுக்கு வருகை தந்து சிறப்பித்த கருணையாளர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றிகள்

என் இனிய உறவுகளே! 28 யூலை 2024 ஞாயிற்றுக்கிழமை முல்லைத்தீவு புனிதபூமி அன்பு இல்லக் குழந்தைகளுக்காக உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகை 13வது ஆண்டாக நடத்திய தமிழும் இசையும் ஊட்டும் கரங்கள் நிகழ்வுக்கு வருகை தந்து சிறப்பித்த அனைத்து கருணை நிறைந்த உள்ளங்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றிகள்.(3ம் பக்கம் பார்க்க)



## கனடா ஸ்ரீஐயப்பன் ஆலய ஜோதி விழா 2024 அலை கடலெனத் திரண்ட மக்கள் வெள்ளம்!





## தமிழ் பொது வேட்பாளராக அரியநேந்திரன் தெரிவு!

தமிழ் பொது வேட்பாளராக இலங்கை த்தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் பா.அரியநேந்திரன். அறிவிக்கப்பட்டுள்ளார். சிவில் அமைப்புகளின் ஒருங்கிணைவுடன் உருவாக்கப்பட்ட தமிழ் மக்கள் பொதுச்சபையின் ஏழு பிரதிநிதிகளும் தமிழ்த் தேசிய அரசியல்கட்சிகள் ஏழினது பிரதிநிதிகளும் கூட்டிணைந்து தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பை உருவாக்கியிருந்தனர். அவ்வாறு உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பின் சந்திப்பு யாழ்ப்பாணத்தில் 08 ஆகஸ்ட் 2024 நேற்றைய தினம் வியாழக்கிழமை (4ம் பக்கம் பார்க்க)



## தமிழரசுக்கட்சி என்ன செய்யப் போகின்றது?

ஜனாதிபதி தேர்தலில் ஒரு தமிழ் பொது வேட்பாளரை நிறுத்துவதற்கான முயற்சி அதன் இறுதி கட்டத்தை எட்டிவிட்டது.. தமிழ் மக்கள் பொதுச் சபையும் தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை ஏற்றுக்கொள்ளும் கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்பட்டு வருகின்றன. ஆனால் இலங்கை தமிழரசு கட்சி அதன் இறுதி முடிவை இதுவரையில் அறிவிக்கவில்லை. அவ்வாறானதொரு முடிவை தமிழரசு கட்சியால் அறிவிக்க முடியுமா என்னும் கேள்வியுடன் நாட்கள் நகர்கின்றன. பொதுவான அவதானத்தில், தமிழரசு கட்சியால் அவ்வாறானதொரு உறுதியான (17ம் பக்கம் பார்க்க)

KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

"ஒரு முகவர் இரு சேவைகள்"
"One Broker Two Services"
Roshan Wignarajah
Real Estate Sales Rep./ Mortgage Broker
416-716-5946
rwignara@gmail.com
RE/MAX ROYAL PROPERTIES
Phone: (416) 321-0110
MORTGAGE ALLIANCE
1-877-366-3487

THINKING OF

# SELLING OR BUYING A HOME?

www.AgentSiva.com

*Your neighborhood sales representatives*



## Siva Kandiah
Sales Representative
**Dir: 416-301-9540**
sivakandiahhome@gmail.com

Team SIVA
WILL BRING THE BEST RESULTS!

## Piravien Siva
Sales Representative B.Comm.
**Dir: 647-221-5220**
piravien@gmail.com



21 Years Real Estate Experience

**HomeLife Today Realty Ltd.,**
Brokerage. INDEPENDENTLY OWNED AND OPERATED
*Listing Agent's Commission plus 2.5% Buyer's Agent commission- Conditions apply


HOMELIFE HIGHER STANDARDS

Bus: 416.298.3200
11 Progress Avenue, Suite 200, Toronto, ON. M1P4S7
NOT INTENDED TO SOLICIT PROPERTIES ALREADY UNDER CONTRACT

• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY

### Simcoe St N. & Conlin Rd

**Oshawa** $275,000
0 Beds • 1 Bath • 1 Rooms
Welcome To University Studios!


### Danforth Ave & Victoria park

**East York** $410,000
1 Beds • 1 Bath • 4 Rooms
Fully Renovated unit


### Neilson/Tapscott

**Malvern** $460,000
2 Beds • 2 Bath • 5 Rooms
Close to the Hwy 401 and the TTC

### Adelaide St & Simcoe St

**Toronto** $680,000
1+1 Beds • 1 Bath • 5 Rooms
Close to the Hwy 401 and the TTC

### Sheppard & Neilson

**Malvern** $699,900
3 Beds • 2 Baths • 6 Rooms
Low Maintenance Fees!


### HWY 48 & High Street

**Georgina** $774,900
3 Beds • 3 Baths • 7 Rooms
Brand New Never Lived Home

### McLevin Ave & Morningside

**Malvern** $799,000
3+1 Beds • 3 Baths • 6+2 Rooms
Finished Basement

### Mavis Rd / Eglinton Ave

**Mississauga** $859,000
3 Beds • 3 Baths • 8 Rooms
Finished Basement


### Garner Rd E & Raymond Rd

**Hamilton** $899,999
3 Beds • 5 Baths • 10 Rooms
Hardwood flooring throughout


### Church St N & Rossland Rd W


**Ajax** $950,000
3 Beds • 3 Baths • 6 Rooms
Hardwood flooring throughout

### Townline Rd & Shankel Rd

**Oshawa** $1,099,900
3 Beds • 4 Baths • 8 Rooms
Finished Basementt


### Bristol Rd / Terry Fox Way

**Mississauga** $1,119,999
3 Beds • 4 Baths • 9+1 Rooms
Easy commutes to the 401,403

### Midland Ave/ Eglinton Ave

**Scarborough** $1,150,000
3 Beds • 2 Baths • 6+1 Rooms
Hardwood flooring throughout

### Hwy 48/Castlemore
FOR LEASE

**Markham** $3,950
4 Beds • 3 Baths • 6 Rooms
1 Min to Mount Joy Go Train Station

### Staines/Finch
FOR LEASE

**Scarborough** $3,700
4 Beds • 3 Baths • 7 Rooms
1 Min away to public school

### Hwy 7/Warden
FOR LEASE

**Markham** $2,400
1+1 Bed • 2 Baths • 4+1 Rooms
Open concept layout

# PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!

**EELANADU**
105 DINSDALE DR
WOODBRIDGE - ON
L4H 2M4 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

### வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழ நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கிய மான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்பு வோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலை பேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனை த்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்ட வர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகை யிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப் பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடை யாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

# அரங்கம் நிறைந்த “தமிழும் இசையும்” நிகழ்வுக்கு வருகை தந்து சிறப்பித்த கருணையாளர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றிகள்



என் இனிய உறவுகளே! 28 யூலை 2024 ஞாயிற்றுக் கிழமை முல்லைத்தீவு புனிதபூமி அன்பு இல்லக் குழந்தைகளு க்காக உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகை 13வது ஆண்டாக நடத் திய தமிழும் இசையும் ஊட்டும் கரங்கள் நிகழ்வுக்கு வருகை தந்து சிறப்பித்த அனைத்து கருணை நிறைந்த உள்ளங்களுக்கும் என் நெஞ் சார்ந்த நன்றிகள்.

இந் நிகழ்வை மக்கள் முன் கொண்டு சென்ற உலகத்தமிழர், உதயன், ஈழ முரசு தமிழர் தகவல் சஞ்சிகை ஆகிய அச்சு ஊடகங்களுக்கும் CTBC வானொலி ஈஸ்ட் எப்.எம் வானொலி யுகம் வானொலி மற்றும் மின்னிதழ் ஊடகங்களுக்கும் என் மனமார்ந்த நன்றிகள்.

என் இனிய உறவுகளே! உங்களது ஒத்துழைப்பும் ஒத்தாசையும் அது வாரி வழங்குகின்ற பெரும் நிதியும் இருந்தால் எம் தாயகத்தில் யுத்தம் தின்ற பெற்றோர்களின் குழந்தைகளை நிச்சயம் வாழ வைக்க முடியும் என்ற அசைக்க முடியாத நம்பிக்கையோடு எமது பயணம் தொடரும். நம்பிக்கை தான் வாழ்க்கை.

எம்மோடு இணையுங்கள்! தாயகக் குழந்தைகளை அறிவு சார் சமூகமாக வாழ வைப்போம்! மீண்டும் சந்திப் போம்! மீண்டும் நன்றிகள்!

விழா தொடர்பான போட்டோக்கள் 12, 13ம் பக்கத்தில் உள்ளது. தொடர்புகளு க்கு ஈழநாடு பரமேஸ் 416 841 9600

# புலம்பெயர் சிங்கள சமூகம் ஓரணியாகின்றனர்? தமிழ் சமூகம் அணி திரளுமா?



அநுரகுமார திஸநாயக்கா புலம் பெயர்ந்த சிங்கள மக்களை தொடர்ந் தும் சந்தித்து வருகின்றார். இவ்வாறு சந்திக்கும் ஒவ்வொரு சந்தர்ப் பங்களி லும் நாங்கள்தான் உங்களுக்கான ஒரேயொரு தெரிவு என்கின்றார்

அந்த அடிப்படையில் உங்களின் ஆதரவை எங்களுக்கு தர வேண்டும் எங்களின் வெற்றிக்காக நீங்கள் ஒன்று திரள வேண்டும் என்பதை வலியுறுத்தி வருகின்றார். இந்தப் பின்புலத்தில் தமிழ் புலம் பெயர் சமூகம் என்ன செய்யப் போகின்றது என்னும் கேள்வி எழுந்திருக்கின்றது.

தமிழ்ப் பொது வேட்பாளரை நோக்கி அணிதிரளப் போகின்றதா அல்லது தமிழ்ப் பொது வேட்பாளரை தோல்வி யுறச் செய்யப் போகின்றதா? 2009இற்கு பின்னரான, கடந்த பதினைந்து வருட ங்களில் தமிழ் மக்கள் மத்தியில் புத்து ணர்ச்சியை ஏற்படுத்தக்கூடிய அரசியல் செயல்பாடுகள் எதனையும் களத்திலும் புலத்திலும் மேற்கொள்ள முடிய வில்லை.

அவ்வாறான முயற்சிகள் தொடர்பில் சிலர் பேசிய போதிலும் கூட, அதனை அடுத்த கட்டத்துக்கு அவர்களால் கொண்டு செல்ல முடியவில்லை. ஆனால், முதன் முறையாக தமிழ்ப் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத் தும் நிலைப்பாடு கணிசமான தூரம் வரையில் வெற்றிகரமாக முன்னெடுக் கப்பட்டிருக்கின்றது.

கடந்த காலத்தில் ஒரு தனிநபராக தமிழ் வேட்பாளர் ஒருவர் போட்டி யிட்டமை தமிழ் அரசியல் சூழலில் பலவீனமாகவே நோக்கப்பட்டது மக்களும் ஆதரிக்கவில்லை. மக்கள் அவ்வாறான ஒருவரை ஆதரிக்காத போது அவர் முன்வைத்த கோரிக்கை களின் பெறுமதி என்ன? இது தொடர்பில் புலம்பெயர் அமைப்புகள், அரசியல் செயல்பாட்டாளர்கள் தெளி வாக சிந்திக்க வேண்டும். புலம்பெயர் சூழலில் நினைப்பதை தாயகத்திலுள்ள வர்கள் கூற வேண்டுமென்று எதிர் பார்க்கக்கூடாது.

தமிழ்ப் பொது வேட்பாளர் நிலைப் பாட்டை ஒரு வெற்றிகரமான நிலைப் பாடாக முன்னெடுப்பதைத் தங்களின் கடமையாக புலம்பெயர் சமூகம் கருத வேண்டும். இரண்டு வழிகளில் புலம் பெயர் சமூகம் இதனை பலப்படுத்த முடியும் ஒன்று, பலமான நிதி ஆதரவு இரண்டா வது, தங்களின் உறவினர் கள் வழியாக களத்தில் பிரசாரத்தை தீவிரப்படுத்துதல்.

புலம் பெயர்ந்து வாழும் சிங்கள மக்களால் அநுரகுமார திஸநாயக்க வின் வெற்றிக்காக ஒன்றுபட முடியும் உழைக்க முடியும் என்றால் ஏன் தமிழ் புலம்பெயர் சமூகத்தால் முடியாது? யூத ‘டயஸ்போறா’வுக்கு பின்னர், ஒப்பீட்டு அடிப்படையில் தமிழ் டயஸ் போறாவுக்கு ஒரு சர்வதேச முக முண்டு. தற்போது அவ்வாறானதொரு முகம் எங்களுக்கு இருக்கின்றது என்பதை நிரூபிப்பதற்கான சூழல் உருவாகியிருக்கின்றது.

இதனை புலம்பெயர் சமூகம் ஒரு சமூகமாக நிரூபிக்கத் தவறினால் புலம் பெயர் சூழலிலிருந்து இதுவரையில் கூறிவந்த விடயங்கள் அனைத்தும் அர்த்தமற்றதாகி விடலாம். தமிழ் பொது வேட்பாளரை நோக்கி தமிழ் வாக்குகளை குவிப்பதில் புலம்பெயர் சமூகத்துக்கு பெரியளவிலான பங்கு உண்டு. இதனை செய்யத் தவறினால் புலம்பெயர் சமூகம் வலுவற்றதாக இருப்பதான தோற்றமே மிஞ்சும். புலம் பெயர் அமைப்புகள் இது தொடர்பில் சிந்திக்க வேண்டும். செயல்பட வேண் டும்.

இது தமிழ்த் தேசியத்தின் பெயரால் தமிழ்ப் பொது வேட்பாளரை நோக்கி அணிதிரள வேண்டிய காலம். இந்த விடயத்தில் களமும் புலமும் ஒன்று திரள வேண்டும். தமிழ்ப் பொது வேட்பாளர் யார் அவரின் தகுதிகள் என்ன என்பதற்கு அப்பால் அவர் தமிழ்த் தேசிய இனத்தின் குறியீடாக இருக்கின்றார் என்பதைப் பற்றி மட்டுமே சிந்திக்க வேண்டும். இனத் தின் குறியீட்டை நோக்கி, எவ்வாறு மக்களை அணி திரட்டுவது அதற்கு நாம் என்ன செய்ய வேண்டும் இந்தக் கேள்விகள் மட்டுமே புலத்தில் இருக்க வேண்டும்.

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**



குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்

**2401 Eglinton Ave East, Suite 300**
**Toronto, Ontario M1K 2M5**
**416 755 5544**

# தமிழ் பொது வேட்பாளராக அரியநேந்திரன் தெரிவு!

## ஜனாதிபதி தேர்தலை புறக்கணிக்குமாறு யாழில் துண்டுப்பிரசுரம்!

தமிழ் பொது வேட்பாளராக இலங்கைத்தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் பா.அரியநேந்திரன். அறிவிக்கப்பட்டுள்ளார்.

சிவில் அமைப்புகளின் ஒருங்கிணைவுடன் உருவாக்கப்பட்ட தமிழ் மக்கள் பொதுச்சபையின் ஏழு பிரதிநிதிகளும் தமிழ்த் தேசிய அரசியல்கட்சிகள் ஏழினது பிரதிநிதிகளும் கூட்டிணைந்து தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பை உருவாக்கியிருந்தனர். அவ்வாறு உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பின் சந்திப்பு யாழ்ப்பாணத்தில் 08 ஆகஸ்ட் 2024 நேற்றைய தினம் வியாழக்கிழமை கூடி தமிழ் பொது வேட்பாளரை அறிவித்துள்ளனர்.

அதேவேளை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கொழும்புக் கிளைத் தலைவரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான கே.வி.தவராசா. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சந்திரநேரு சந்திரகாந்தன் ஆகியோரது பெயர்களும் இறுதிப் பட்டியலில் இருந்ததாக தெரிவிக்கப் பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை தமிழ் பொது வேட்பாளர் சுயேட்சையாகவே களமிறக்கப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சுரேஸ் பிரேமசந்திரன் தெரிவித்துள்ளார்.

தமிழ் பொது வேட்பாளராக இலங்கைத் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் பா.அரியநேந்திரன். அறிவிக்கப்பட்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவ்வாறு தெரிவித்தார்.



மேலும் தெரிவிக்கையில் எமது பொது வேட்பாளர் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் என்பதனால் சுயேட்சையாக போட்டியிட முடியும். அதனால் அவர் சுயேட்சையாகவே போட்டியிடுகிறார். தமிழ் பொது வேட்பாளராக போட்டியிட கூடிய 75 தொடக்கம் 80 பேர் வரையிலானவர்களின் பெயர்களை பரிசீலித்தே அரியநேந்திரனை தெரிவு செய்துள்ளோம்..

இலங்கை தமிழரசு கட்சியை சேர்ந்த பலரும் எமக்கு ஆதரவை தெரிவித்துள்ளனர். கட்சியின் முடிவு ஓரிரு நாட்களில் வெளிவரும் என நம்புகிறோம். நாம் அனைத்து தரப்பினரையும் ஒன்றிணைந்து பயணிக்கவே விரும்புகிறோம். எம்முடன் இணைந்து பயணிக்க விரும்புவோர் பயணிக்க முடியும் எனவும் தெரிவித்துள்ளார்.

இது இவ்வாறிருக்க ஜனாதிபதி தேர்தலை புறக்கணிக்ககோரி துண்டு பிரசுரம் வழங்கும் நிகழ்வுவொன்று யாழ்ப்பாணம் திருநெல்வேலி பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் மற்றும் கட்சியின் பிரதிநிதிகள் உள்ளிட்ட சிலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். திருநெல்வேலி புறநகர் பகுதிகள் ஆகியவற்றில் பொதுமக்களுக்கு துண்டுப் பிரசுரத்தினை வழங்கி ஜனாதிபதித் தேர்தலை புறக்கணிக்குமாறு கூறினர்.

அத்துடன், ஜனாதிபதி தேர்தலில் பொதுவேட்பாளர் நிறுத்துவதோ அல்லது பெரும்பான்மை இனத்தவர் ஒருவரை தெரிவு செய்வதில் எவ்வித பயனும், இல்லை என தெரிவித்த செல்வராஜா கஜேந்திரன் ஜனாதிபதி தேர்தலை புறக்கணிப்பது தமிழர்களுக்கு இருக்கின்ற ஒரே ஒரு தீர்வு எனவும் இதன்போது சுட்டிக்காட்டியமை குறிப்பிடத்தக்கது.







கனடா – அருள்மிகு


ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்

104 Rivalda Rd Northyork - On - M9M 2M8 (Weston/Sheppard)

Tel: 416.213.0110 • www.shrimuththumaari.cin

ஆலயம் திறந்திருக்கும் நேரம்
காலை 10.00 மணி முதல் 1.00 மணி வரை
மாலை 5.00 மணி முதல் 8.30 மணி வரை

பூசை நேரம்:
பகல் 12:00 முதல் மாலை 7:30
உற்சவ காலங்களில் பூசை நேரங்கள் மாற்றம் அடையலாம்



அம்பாள் அடியார்களே!

அருள்மிகு கனடா ஸ்ரீமுத்துமாரியம்மன் கோயில் பக்தர்களுக்கு வணக்கம். கனடா ஸ்ரீமுத்துமாரி அம்மன் கோயில் இலாப நோக்கமற்ற தொண்டு நிறுவனமாக கனடா அரசாங்கத்தினால் அங்கீகாரம் பெற்றுள்ளது என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

இதுவரை காலமும் கோயில் நிலம் வாங்குவதற்கு நன்கொடை கொடுத்த பக்தர்கள் அனைவரும் உங்கள் பழைய பற்றுச்சீட்டை கோயிலில் கொடுத்து கனடிய அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட இலக் கம் பதியப் பெற்ற புதிய பற்றுச்சீட்டை கோயிலில் பெற்றுக் கொண்டு அரசாங்கத்திடமிருந்து வருமான வரி வரிச் சலுகையை பெற்றுக் கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

இனி வரும் காலங்களில் கனடா ஸ்ரீமுத்துமாரியம்மன் கோயிலுக்கு நிலம் வாங்குவதற்கும் இப்போது நடைபெறும் திருப்பணிக்காக நன்கொடை செய்வதற்கும் அல்லது எந்தவிதமான பூஜைகள் திருவிழாக்களிற்கும் கோயிலில் பணம் கொடுக்கும் போது அதற்குரிய பற்றுச்சீட்டை பெற்றுக் கொள்ளுவதன் மூலம் அரசாங்கத் திடமிருந்து வருமானவரி வரிச்சலுகையை பெற்றுக்கொள்ளலாம் என்பதை மிக மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம். ஓம் தாயே மகமாரி — நிர்வாகசபை

இரவுப் பூஜை மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும்

# தமிழ் பொதுவேட்பாளருக்கு ரெலோ ஆதரவு வழங்கினாலும் எனது ஆதரவு இல்லை என்கிறார் வினோ எம்.பி

தமிழ் பொது வேட்பாளருக்கு ரெலோ ஆதரவு வழங்கினாலும் எனது ஆதரவு இல்லை. வன்னி மக்களின் மனங்களை அறிந்தே இந்த முடிவு என தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோதராதலிங்கம் தெரிவித்துள்ளார்.

தமிழ் பொது வேட்பாளர் தொடர்பில் தங்கள் நிலைபாடு என்ன என ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதில் அளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

ரெலோ கட்சி பொது வேட்பாளரை ஆதரிக்கின்றது. ஆனால் அதற்கு நான் உடன்பாடில்லை. அது ஒரு விசப் பரீட்சை. நான் வன்னி மக்களின் கருத்துகளை கேட்டறிந்துள்ளேன். அவர்களது நிலைப்பாடு தான் எனது நிலைப்பாடும். பொது வேட்பாளருக்கு வன்னியில் ஆதரவு இல்லை.

பொது வேட்பாளர் என்ற ஒன்று வெல்லப்போவதில்லை. சமஸ்டி உள்ளிட்ட தமிழ் மக்களின்



அபிலாசைகளை முன்னிறுத்தி பொது வேட்பாளரை நிறுத்துகிறார்கள். ஆனால் அவர் குறைந்த வாக்குகளை பெறுகின்ற போது மக்களது அபிலாசைகளுக்கு தமிழ் மக்களது அங்கீகாரம் கிடைக்கவில்லை என்ற ஒரு தோற்றப்பாடு ஏற்படும்.

என்னைப் பொறுத்த வரை தமிழரசுக் கட்சி, தமிழ் தேசிய மக்கள் முன்னனி போன்ற தமிழ் தேசிய கட்சிகளும் இந்த கூட்டணியுடன் இணைந்து அனைத்து தமிழ் தேசியக் கட்சிகளும் பொது வேட்பாளரை நிறுத்தி செயற்பட்டால் அதற்கு எனது ஆதரவு உண்டு. அப்போது தான் மக்கள் அதனை ஆதரிப்பார்கள். ஆனால் தமிழ் தேசிய மக்கள் முன்னனி பகிஸ்கரிக்கிறது. தமிழரசுக் கட்சி பொது வேட்பாளருக்கு ஆதரவு இல்லை. இதனால் தமிழ் வாக்கு சிதறும். சொற்ப வாக்குகளையே பொது வேட்பாளர் பெறுவார். இது பாதிப்பை ஏற்படுத்தும். பொது வேட்பாளர் தெரிவில் 7 கட்சிகளும் 7 பொது அமைப்புக்களும் இருக்கிறார்கள். ஆனால் அந்த கட்சிகளிடமோ அல்லது அந்தஅமைப்புக்களிடமோ பொது வேட்பாளராக போடுவதற்கு ஆட்கள் இல்லை.

பொது வேட்பாளருக்கு ஆதரவு வழங்காத தமிழரசுக் கட்சியின் மத்திய குழு உறுப்பினர்களான சட்டத்தரணி கே.வி தவராசா மற்றும் அக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ப.அரியநேந்திரன் ஆகியோரில் ஒருவரது பெயரை பரிசீலிக்கிறார்கள். அவர்களிடம் வேட்பாளர் இல்லாது பொது வேட்பாளரை எதிர்க்கும் கட்சியிடம் வேட்பாளரை தேடும் நிலை என்றால் சிந்திக்க வேண்டும் என தெரிவித்தார்.

# ஐக்கிய மக்கள் சக்தியின் வடமாகாண அமைப்பாளராக உமாச்சந்திரா பிரகாஷ் நியமனம்!

ஐக்கிய மக்கள் சக்தியின் வடமாகாண பிரதான அமைப்பாளராக உமாச்சந்திரா பிரகாஷ் கடந்த 05 ஆகஸ்ட் 2024 திங்கட்கிழமை சஜித் பிரேமதாஸவினால் நியமிக்கப்பட்டுள்ளார். இதன் பிரகாரம் வடமாகாணத்துக்கான ஐக்கிய மக்கள் சக்தி கட்சி கட்டமைப்பு தொடர்பான பணிகள் மற்றும் கடமைகளை நிறைவேற்றுவதற்கான தலைமை மற்றும் பொறுப்பு உமாச்சந்திரா பிரகாக்கு வழங்கப்பட்டுள்ளது. இதேவேளை வீரகேசரி பத்திரிகையில் கிட்டத்தட்ட ஐந்து வருடங்கள் கடமையாற்றிய அனுபவமும் உமாச்சந்திராவுக்கு உண்டு என்பது குறிப்பிடத்தக்கது.



# வங்கம் தந்த ஓர் எச்சரிக்கை?

இலங்கையின் ஜனாதிபதித் தேர்தல் களம் எவ்வாறு அமையும் என்பதை எவராலும் எதிர்வுகூற முடியாதுள்ளது. எவ்வாறான முடிவுகளும் ஏற்படலாம் ரணில் தென்னிலங்கையில் அதிகம் பணியாற்றுவதை விடவும் வடக்கு — கிழக்கிலேயே நேரத்தை செலவிட்டு வருகின்றார்.

தேர்தல் களம் பல முனைப் போட்டியாக மாறியுள்ள நிலையில் தேர்தல் முடிவுகள் ஏற்படுத்தப் போகும் அரசியல் விளைவுகள் உன்னிப்பாக அவதானிக்கப்படும். யார் வெற்றி பெற வேண்டும் என்பதை விடவும் யார் வெற்றி பெறக் கூடாது என்பதிலேயே வெளித் தரப்புகள் கவனம் செலுத்துவார்கள். இந்தியாவின் அயல் நாடுகளில் ஏற்படும் அரசியல் கொந்தளிப்புகள் மிகவும் சிக்கலானவையாக இருக்கின்றன.

மாலைதீவின் சீன சார்பு ஜனாதிபதியால் ஏற்பட்ட அரசியல் கொந்தளிப்புகள் அடங்குவதற்கு முன்பதாக, பங்களாதேஷை இராணுவம் பொறுப்பேற்றிருக்கின்றது. பிரதமர் ஷேக் ஹசினா நாட்டை விட்டு வெளியேறியிருக்கின்றார்.

இலங்கையில், 69 இலட்சம் சிங்கள மக்களின் ஆதரவில் வெற்றி பெற்ற கோட்டாபய ராஜபக்ஷ மக்கள் கிளர்ச்சியின் மூலம் வெளியேற்றப் பட்டமையைத் தொடர்ந்து மீண்டும் மக்கள் ஆணையுடன் நாட்டை ஆளப் போவது யார் என்னும் கேள்விக்கான பதிலாகவே ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளது.

கோட்டாபயவுக்கு எதிரான மக்கள் கிளர்ச்சியில் பிரதான பங்குவகித்த ஜனதா விமுக்தி பெரமுனவின் (ஜே. வி. பி.) செல்வாக்கு முன்னர் எப்போதும் இல்லாதவாறு அதிகரித்திருப்பதாகக் கருத்துக் கணிப்புகள் கூறுகின்றன. இந்த நிலையில் ஜே. வி. பி. இலங்கையின் அதிகார அரசியலில் பிரதான சக்தியாக மாறியிருக்கின்றது. ஜே. வி. பி. அதிகாரத்தைக் கைப்பற்றுவதை வெளித் தரப்புகள் எவ்வாறு எடுத்துக் கொள்ளும் என்னும் பெரிய கேள்விக்கு மத்தியில 'தான் ஜனாதிபதித் தேர்தல் உற்றுநோக்கப்படுகின்றது.

ஜனாதிபதித் தேர்தல் நெருங்கி வரும் சூழலில் இலங்கையுடன் இராணுவ ரீதியான ஒத்துழைப்புகளை மேம்படுத்திக் கொள்ள சீனா எதிர்பார்ப்பதாக இலங்கைக்கான சீனத் தூதுவர் குறிப்பிட்டிருக்கின்றார்.

இது ஒரு செய்தியை கூறுகின்றது. இலங்கை போன்ற சிறிய நாடுகளுடன் இராணுவ ரீதியான ஒத்துழைப்புகளை ஏற்படுத்திக் கொள்ள வேண்டிய தேவை இல்லை. ஆனாலும் சீனா அவ்வாறான ஆர்வத்தை வெளியிடுவதானது, இந்தியாவுக்கு நெருக்கடிகளைக் கொடுக்கும் நோக்கம் கொண்டது என்பது வெள்ளிடைமலை.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் வெற்றி பெற்றதைத் தொடர்ந்து, இலங்கையின் அது வரையான புவிசார் அரசியல் முக்கியத்துவம் முற்றிலுமாக மாறிவிட்டது. சீனா ஒரு தவிர்க்க முடியாத ஆட்ட நாயகனாக தன்னை ஸ்தாபிப்பதில் குறிப்பிடத்தக்களவு வெற்றியைப் பெற்றிருக்கின்றது.

அந்த வெற்றியை ஓர் எல்லைக்குள் முடக்க வேண்டிய தேவை இந்தியாவுக்கு உண்டு. இந்த விடயத்தில் இந்தியாவால் ஓர் எல்லைக்கு மேல் சகித்துக் கொள்ள முடியாது. இவ்வாறானதொரு பின்புலத்தில் தான் மாலைதீவின் தேர்தல் முடிவுகள் இந்தியாவுக்கு ஓர் எச்சரிக்கையாக மாறின.

இந்தியாவின் பாதுகாப்பில் முற்றிலுமாக தங்கியிருந்த ஒரு சிறிய நாடு இந்தியாவுக்கு எதிரான நிலைப்பாட்டை எடுப்பதும் சீன சார்பு நிலைப்பாட்டை வெளிப்படையாக மேற்கொண்டமையும் தெற்காசிய அரசியலில் ஒரு சிவப்பு எச்சரிக்கையாகியது.

இவ்வாறானதொரு பின்புலத்தில், இலங்கையின் ஜனாதிபதித் தேர்தல் இந்தியாவின் உடனடி மற்றும் நீண்டகால பிராந்திய நலன்களுடன் பின்னிப் பிணைந்திருக்கின்றது. அதற்காக பெரியளவிலான தலையீடுகள் நிகழ்ந்து விடும் என்று உடனடியாகக் கூறி விட முடியாது. ஆனால், நிலைமைகள் எல்லை மீறினால் தலையீடுகளை தவிர, வேறு வழிகளும் இருக்காது. அவ்வாறானதொரு சூழலில் தமிழ் மக்கள் மேசையில் பலமாக இருக்கும் நிலைமை உருவாகலாம்.

# இப்படி எத்தனையைப் பார்த்து விட்டோம்?

யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்த ஜனாதிபதி ரணில் விக் கிரமசிங்க, தேசிய இனப்பிரச்னைக்கான தீர்வை காணப் போவதாக தெரிவித்திருக்கின்றார். தேர்தல் காலம் என்பதால், இனிவரும் நாட்களில், இது போன்ற பல கதைகளை அடிக்கடி கேட்கக் கூடியதாக இருக்கும். சில தினங்களுக்கு முன்னர், எம்.ஏ.சுமந்திரன் ரணில் விக்கிரமசிங்கை சந்தித்து கலந்துரையாடியதாகவும் செய்தியொன்று வெளியாகியிருந்தது.

இதன் போது ஜனாதிபதி தேர்தலை தொடர்ந்து, மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படுமென்று, விக்கிரமசிங்க கூறினார் எனவும் செய்திகள் எழுதப் பட்டிருந்தது. ரணில் – மைத்திரி ஆட்சிக் காலத்தில் மாகாண சபைத் தேர்தலை நடத்தியிருக்கலாம். ஆனால் அதனை திட்டமிட்டு பிற்போட்டிருந்தனர்.

மாகாண சபைத் தேர்தலை பிற்போட்டமைக்கு பின்னால், சம்பந்தன் சுமந்திரனின் ஒத்துழைப்பும் இருந்திருந்தது. வர முடியாத அரசியல் யாப்பு ஒன்று, வருமென்று கூறி ஐந்து வருடங்களை வீணாக்கியது தான் அன்றைய சாதனையாக இருந்தது. இன்று அதே ரணில் விக்கிரமசிங்க மீண்டும் இனப்பிரச்னைக்கான தீர்வு தொடர்பில் பேசுகின்றார். தன்னை நம்புமாறு தமிழ் மக்களை கோருகின்றார்? அவர் உண்மையிலேயே இனப்பிரச்னையை தீர்க்க விரும்பினால் அது நல்ல விடயம். அதனை நாங்கள் வரவேற்கலாம். ஆனால் கடந்த கால அனுபவமோ தமிழ் மக்களை எச்சரிக்கின்றது அதாவது, இது போன்ற எத்தனை தேர்தல் காலக் கதைகளை நாங்கள் கேட்டுவிட்டோம்?

இனியும் கதை கேட்கும் சமூகமாக இருப்பதா அல்லது இது வரையான கதைகளுக்கு எதிர்வினையாற்றும் சமூகமாக இருப்பதா? இந்தக் கேள்வியின் அடிப்படையில் தான், ஈழத் தமிழ் சமூகம், இந்த ஜனாதிபதி தேர்தலை கையாள வேண்டியிருக்கின்றது.

தென்னிலங்கையின் பிரதான வேட்பாளர்கள் அனைவருமே, போட்டி போட்டுக் கொண்டு, தமிழ் மக்கள் மீதான கரிசனையை காண்பிக்கின்றனர். ஆனால் இதே வேட்பாளர்கள், குருந்தூர் மலை விவகாரத்தின் போது, வெடுக்குநாறி சிவன் ஆலய விவகாரத்தின் போது, தையிட்டி பிரச்சனையின் போது எங்கிருந்தனர்?

அப்போதெல்லாம், தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு ஏன் செவி சாய்க்கவில்லை? இலங்கை தமிழரசுக் கட்சி உருவாக்கப்பட்ட காலத்திலிருந்து தமிழ்த் தலைமைகள் காலத்துக்கு காலம், உடன்பாடுகளை ஏற் படுத்திக் கொள்ள முயற்சித்திருக்கின்றனர். இந்த உடன்பாடுகளின் வரலாற்றை எடுத்து நோக்கினால், ஆரம்பத்தில், மிகவும் குறைவான கோரிக்கைகளைத் தான் தமிழ் தலைமைகள் முன்வைத்திருந்தனர். ஆனால் கொழும்பின் அதிகார நாற்காலியில் இருந்தவர்களோ, அந்தக் குறைவான கோரிக்கைகளைக் கூட கருத்தில் கொள்ளத் தயாராக இருக்கவில்லை. உடன்பாடுகளை கிழித்து வீசினர்.

இதன் விளைவாகவே தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சனை வீரியம் கொண்டது. ஆயுதப் போராட்டமாக வளர்சியுற்றது. யுத்தமாக மாறியது. இன்றைய, இலங்கைத்தீவு என்பது, ஒரு உள்நாட்டு யுத்தத்தின் சாட்சியாக இருக்கின்றது. ஆனால் இவ்வாறானதொரு சூழலில் கூட, அரசியலமைப்பில் உள்ளவற்றைக் கூட அமுல்படுத்துவதற்கு அதிக பஞ்சாயத்துக்களை செய்து கொண்டிருக்கும் நிலையிலேயே கொழும்பின் ஆட்சியாளர்கள் இருக்கின்றனர்.

இந்த அரசியல் பஞ்சாயத்தை தொடர்வதற்கு அல்லது பங்கு போடுதற்கான தேர்தல் போட்டி தான் தற்போது நடைபெறவுள்ளது. இது ஒரு நெருக்கடியான தேர்தல் களம் என்பதால் ஈழத் தமிழ் மக்களின் வாக்குகள் இன்றியமையாத நிலையிலேயே இருக்கின்றது.

இதன் காரணமாகவே, தென்னிலங்கையின் பிரதான வேட்பாளர்கள் அனைவரும், தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வை உச்சரிக்கின்றனர். இதனை நம்பி தமிழ் மக்கள் வாக்களிக்க முடியுமா? அவ்வாறு வாக்களிக்குமாறு தமிழ் தேசியக் கட்சிகள் கூற முடியுமா?

# 13வது திருத்தத்தின் கீழ் பறிக்கப்பட்ட அதிகாரங்களை மீளத் தரக்கூடிய அதிகாரங்களை வழங்குவேன் -ரணில்

அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தின் கீழ் பறிக்கப்பட்ட அதிகாரங்களில் நிர்வாக ரீதியாக மீளத்தரக்கூடிய அதிகாரங்களை முதலில் வழங்குவதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க உத்தரவாதம் அளித்திருப்பதாகத் தெரிவித்துள்ள இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், பாராளுமன்றத்தில் மாகாண சபைத் தேர்தல் சட்டமூலம் மீதான வாக்கெடுப்பின் போது எதிர்க்கட்சி அதற்கு முழுமையாக ஆதரவளிக்கும் எனவும், அரசாங்க தரப்பினரின் ஆதரவை தான் பெற்றுத் தருவதாக ஜனாதிபதி கூறியிருக்கிறார் எனவும் சுட்டிக் காட்டியுள்ளார்.



மாகாண சபைத் தேர்தல் சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தை எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 6ஆம் திகதி முன்னெடுப்பதற்கு கட்சித்தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருக்கும் நிலையில், இதற்கு அப்பால் ஜனாதிபதியுடனான தொலைபேசி உரையாடலின் போது அவர் வழங்கிய ஏனைய உத்தரவாதங்கள், அதிகாரப்பகிர்வு உள்ளிட்ட அரசியல் தீர்வு தொடர்பில் ஜனாதிபதியின் நிலைப்பாடு, அரசியல் தீர்வு விடயத்தில் சஜித் பிரேமதாஸ, அநுரகுமார திஸாநாயக்க ஆகியோர் வழங்கியிருக்கும் உத்தரவாதங்கள் குறித்த திருப்தி நிலை, தற்போதைய பாராளுமன்றத்தில் மாகாண சபைத் தேர்தல் சட்டமூலத்தை நிறைவேற்றுவதற்கான சாத்தியப்பாடு என்பன தொடர்பில் கேள்வி எழுப்பிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கூறியதாவது: அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தின் கீழ் பறிக்கப்பட்ட சில அதிகாரங்களை மீண்டும் வழங்குவதெனில், அதனை நிர்வாக ரீதியாக செய்யமுடியும். அதற்கமைய கல்வி அதிகாரங்கள் அனைத்தையும் மாகாண சபையிடமே வழங்குவதாக ஜனாதிபதி உத்தரவாதம் அளித்தார்.

இருப்பினும் சட்ட ரீதியாக பறிக்கப்பட்ட சில அதிகாரங்களை அச்சட்டங்களைத் திருத்துவதன் ஊடாக அல்லது அவற்றை நீக்குவதன் ஊடாகவே மீளப்பெற முடியும். அதற்கு கால அவகாசம் தேவைப்படும். எனவே தற்போது நிர்வாக ரீதியாக வழங்கக்கூடிய அதிகாரங்களை வழங்குவதாக ஜனாதிபதி கூறுகிறார்.

அரசியல் தீர்வினை பொறுத்த மட்டில் அரசியலமைப்பில் இருப்பதை நடைமுறைப்படுத்தல் மற்றும் கடந்த காலங்களில் பறிக்கப்பட்ட அதிகாரங்களை மீள வழங்கல் போன்ற உத்தரவாதங்களையே ஜனாதிபதி வழங்கியிருக்கிறார். மாறாக, அதில் புதிதாக எதனையும் கூறவில்லை. அதேவேளை அரசியல் தீர்வு விவகாரத்தில் ஏற்கனவே கூறியவற்றை விட முன்னேற்றகரமான விடயங்களை தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ளடக்குவதாக சஜித் பிரேமதாஸ கூறியிருக்கிறார். அதேபோன்று அநுரகுமார திஸாநாயக்க புதிய அரசியலமைப்பிலேயே தீர்வு எனக் கூறுவதால், அதில் போதிய தெளிவில்லாமல் இருக்கிறது. எனவே புதிய அரசியலமைப்பின் ஊடாக தீர்வு வழங்கல் செயன்முறை எவ்வாறு நடைமுறைப்படுத்தப்படும் என்பது பற்றி எமக்குத் தெளிவாக விளக்கமளிக்கப்பட வேண்டும் என நான் அவரிடம் வலியுறுத்தியிருக்கிறேன். இருப்பினும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க புதிய அரசியலமைப்பு தொடர்பில் எதனையும் கூறவில்லை

அடுத்ததாக பாராளுமன்றத்தில் மாகாண சபைத் தேர்தல் சட்டமூலம் மீதான வாக்கெடுப்பின் போது எதிர்க்கட்சி அதற்கு முழுமையாக ஆதரவளிக்கும். அதேபோன்று அரசாங்க தரப்பினரின் ஆதரவைத் தான் பெற்றுத் தருவதாக ஜனாதிபதி கூறுகிறார். எனவே இச்சட்டமூலம் நிறைவேற்றப்படுமா என்று பொறுத்திருந்து தான் பார்க்கவேண்டும் என்றார்.

மாதம் இருமுறை அச்சுப் பத்திரிகையாக
வெளியாகும் உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
23 ஆகஸ்ட் 2024 வெள்ளிக்கிழமை அச்சுப் பத்திரிகையாக அனைத்து தமிழ் வர்த்தக நிலையங்களிலும் பெற்றுக் கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு 416 841 9600
வாரம் தோறும் மின்னிதழ் மூலம் பார்வையிடலாம்

தற்பொழுது ON LINE இல் வகுப்புகள்
Math & Physics Tutoring
(For High School Students)

Special Classes for IB, AP & University Students
Math: Grade 9-12, Advanced Functions, Calculus & Vectors and Data Management.
Physics: Grade 11 & 12
கணித வகுப்புக்கள் தரம் 9 முதல் 12 வரை
பௌதீகவியல் வகுப்புக்கள் தரம் 11 முதல் 12 வரை
Instructor: S. Elancheliyan, B. Sc (Sri Lanka), B. Eng (Canada)
சி.இளஞ்செழியன்
Tel: 416-524-0424

# ஒலிம்பிக்கில் கவனத்தை ஈர்த்து வரும் ஈழப் பின்னணி கொண்ட இளம் பெண்



2024 பாரீஸ் ஒலிம்பிக் போட்டிகளில் கவனம் ஈர்த்து வருகிறார், இலங்கைத் தமிழ் பின்னணி கொண்ட இளம்பெண் ஒருவர். 2024 பாரீஸ் ஒலிம்பிக்கில் 02 யூலை 2024 வரலாறு படைத்துள்ளது மலேசிய பெண்கள் இரட்டையர் அணி. ஒலிம்பிக்கில் பெண்கள் இரட்டையர் பிரிவில் அரையிறுதிக்கு முன்னேறிய முதல் மலேசிய அணி இது தான். தீனா முரளிதரன் (Thinaah Muralitharan) மற்றும் பியர்லி டேன் (Pearly Tan) என்னும் இருவரைக் கொண்ட அணி தான் அது.

இதில் தீனா இலங்கைத் தமிழ் பின்னணி கொண்டவர் ஆவார். அவரது தந்தை முரளிதரன் ஒரு பொறியாளர். தாய் பரிமளாதேவி கலாலிங்கம். தமிழ், மலாய், ஆங்கிலம் மற்றும் மாண்டரின் ஆகிய நான்கு மொழிகள் பேசும் தீனா 2024 பாரீஸ் ஒலிம்பிக்கில், பெண்கள் இரட்டையர் பிரிவில் அரையிறுதிக்கு முன்னேறி உலகின் கவனம் ஈர்த்துள்ளார்.

மலேசியாவில் பிறந்த தீனா அந்நாட்டின் சார்பாக ஒலிம்பிக் போட்டிகளில் கலந்து கொண்டுள்ளார். தீனா, பியர்லி இணை ஒலிம்பிக்கில் கலந்து கொள்வது இதுவே முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது.

# ஜனாதிபதியுடனான சந்திப்பு இரகசியம் அல்ல! அனந்தி சசிதரன் தன்னிலை விளக்கம்!



நான் ஜனாதிபதியுடன் ரகசியமான சந்திப்பில் ஈடுபடவில்லை. பரகசியமான சந்திப்பிலேயே ஈடுபட்டேன் என வடக்கு மாகாண சபையின் முன்னாள் அமைச்சரும் ஈழ மக்கள் சுயாட்சிக் கழகத்தின் செயலாளர் நாயகமான ஆனந்தி சசிதரன் தெரிவித்துள்ளார்.

கடந்த 04 ஆகஸ்ட் 2024 ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி வேட்பாளர்கள் என்ற வகையில் கடந்த மாதம் சஜித் பிரேமதாச அவர்களை சந்தித்து இருந்தேன். வடக்கு கிழக்கு மக்கள் தொடர்பான அவர்களுடைய நிலைப்பாடு என்ன என்பதை நான் கேட்டுக் கொண்டேன்.

அதேபோல ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்களையும் நான் சந்தித்திருந்தேன். நான் ஏற்கனவே வடக்கு மாகாண சபையின் உறுப்பினராகவும் அமைச்சராகவும் இருந்துகின்றேன். தற்பொழுது ஈழத் தமிழர் சுயாட்சி கழகத்தினுடைய செயலாளர் நாயகமாகவும் பணியாற்றுகின்றேன். ஒரு மரியாதையின் நிமித்தமே நான் ஜனாதிபதி வேட்பாளரை சந்திக்கின்றேன். அந்த சந்திப்பில், பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்பாக அவருடைய நிலைப்பாடு என்ன? அவரது தேர்தல் விஞ்ஞாபனத்தில் பாதிக்கப்பட்டவர்கள் குறித்தான தீர்வுகள் என்ன என்பது தொடர்பாக கேட்டுத் தெரிந்து கொள்கின்ற நிலையில் இந்த சந்திப்பை மேற்கொண்டேன்.

இந்த சந்திப்பானது இரகசியம் அல்ல. பரகசியமான சந்திப்பு தான். அந்த வகையில் நான், தொடர்ந்தும் ஏனைய ஜனாதிபதி வேட்பாளர்கள் எனக்கு அழைப்பு விடுக்கின்ற சந்தர்ப்பத்தில் அவர்களையும் சந்தித்து அவர்களுடைய நிலைப்பாடுகள் என்ன என்பதை அறிந்து மக்களுக்கு சொல்வதில் நான் தயாராக இருக்கின்றேன் என்றார்.

அனந்தியின் இந்த அறிக்கையைப் பார்த்த எமது அலுவலக பையன் கேட்கின்றான் இதைத் தானே சுமந்திரனும் செய்கின்றார். அவரை துரோகி என்கின்றீர்கள். இப்போது அனந்தி? பதில் சொல்ல முடியவில்லை.

# 2040ம் ஆண்டு நீரில் மூழ்கப் போகும் சென்னையின் ஒரு பகுதி!

2040 ஆம் ஆண்டளவில் கடல் மட்டத்தின் உயர்வு காரணமாக சென்னை மாநகரின் 7 சதவிகித நிலப்பரப்பு கடல் நீரில் அமிழும் எனத் தெரியவந்துள்ளது. இந்தியாவின் தேர்ந்தெடுக்கப்பட்ட கடலோர நகரங்களுக்கான கடல் மட்ட உயர்வு மற்றும் கடல்நீர் புகுவது பற்றிய வரைபட அறிக்கையை அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் கொள்கை ஆய்வு மையம் வெளியிட்டுள்ளது.

இந்த ஆய்விற்காக இந்தியாவின் கிழக்கு மற்றும் மேற்குக் கடற்கரையிலிருந்து 15 நகரங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதுடன், இவற்றில் சென்னை மற்றும் மும்பை நகரங்களே முதன்மை நகரங்களாக பரிசீலிக்கப்பட்டுள்ளன. அதன்படி, 2040ஆம் ஆண்டில் சென்னை பெருநகரப் பகுதியின் குறிப்பிட்ட பகுதிகள் 7.29 சதவிகிதம் வரையில் நீரில் மூழ்கும் எனவும், 2060 ஆம் ஆண்டில் 9.65 சதவிகிதம் ஆகவும், 2080 ஆம் ஆண்டில் 15.11 சதவிகிதம் என நீர்மூழ்கும் இந்தப் பரப்பு அதிகரிக்க கூடும் எனவும் அந்த ஆய்வரிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, அடையாறு சுற்றுச்சூழல் பூங்கா, தீவுத்திடல், அசோகச் சக்கர நினைவுச் சின்னம், பள்ளிக்கரணை சதுப்பு நிலம் மற்றும் துறைமுகம் முதலான பகுதிகளில் கடல் மட்டம் உயரும் அபாயமுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

1987முதல் 2021 வரையான காலப்பகுதியில் சென்னையின் கடல் மட்டம் 0.679 சென்றி மீற்றர் வரை உயர்ந்துள்ளதாகவும், வருடாந்திர உயர்வு 0.066 சென்றி மீற்றர் எனவும் அந்த ஆய்வறிக்கை தெரியவந்துள்ளது.

கடந்த 30 ஆண்டுகளில் மும்பையில் அதிக பட்ச கடல் மட்ட உயர்வு ஏற்பட்டுள்ளதாகவும், தூத்துக்குடியிலுள்ள தொழிற்பேட்டைப் பகுதிகளும் வெள்ளத்தில் மூழ்கும் அபாயத்தை எதிர்கொள்ளவுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதிகரித்து வரும் நகர மயமாக்கல், கடற்கரையில் ஏற்படும் காலநிலை மாற்றங்களின் காரணமாக தாழ்வான கடலோர பகுதிகள் கடல் மட்ட உயர்வால் அதிகளவில் பாதிக்கப்படுவதாக அந்த ஆய்வு அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது

## வித்தியாசமான தேர்தல் களம்

ஜனாதிபதித் தேர்தல் மிகவும் குறுகிய காலத்துக்குள் நடந்து முடியவுள்ளது. இதில் எவர் வெற்றி பெறுவார் என்பது தொடர்பில் தெளிவான பதில் எவரிடம் இல்லை. ஆனால், ஊகங்கள் ஏராளமுண்டு. ஆனால், ஒரு விடயம் மட்டும் வெள்ளிடைமலை. அதாவது, இந்தத் தேர்தல் களம் இலங்கைத் தீவு இதுவரையில் காணாத ஒன்றாக அமையப் போகின்றது. மும்முனை போட்டி தற்போது நான்குமுனைப் போட்டியாக மாறவுள்ளது.

இந்த நிலையில், பிரதான வேட்பாளர்களில் ஒருவரும் ஐம்பது வீத வாக்குகளை தாண்டுவதற்கான வாய்ப்பில்லை என்றே தெரிகின்றது. ஒருவேளை தாண்ட வேண்டும் என்றால் நிச்சயமாக எண்ணிக்கையில் சிறுபான்மை மக்களின் வாக்குகள் கட்டாயம். இந்த இடத்தில், வடக்கு கிழக்கு தமிழ் மக்களின் வாக்குகள் பிரதான இடத்தை வகிக்கப் போகின்றது.

2005இல், தென்னிலங்கை அரசியல் நிகழ்ச்சிநிரலை குழப்பியது போன்று இம்முறையும் ஈழத் தமிழ் வாக்குகள் தென்னிலங்கையின் அரசியலை தீர்மானிக்கக் கூடியவையாக இருக்கின்றன. இதனை தமிழ் மக்கள் எவ்வாறு பயன்படுத்தப் போகின்றனர்? ரணில் விக்கிரமசிங்க சுயேச்சையாக போட்டியிடுவதாக அறிவித்திருக்கின்றார்.

இந்த அறிவிப்பில் மாற்றங்களும் ஏற்படலாம் ஏற்படாமலும் விடலாம். ஆனால், அது ஒரு சிறந்த வியூகமாகவே தெரிகின்றது. அதாவது நான் நாட்டுக்கு தேவையென்று எண்ணுபவர்கள் அனைவரும் என்னுடன் வாருங்கள் நாம் அனைவரும் இணைந்து நாட்டை கட்டி யெழுப்புவோம் என்னும் தெரிவை அவர் ஏற்படுத்தியிருக்கின்றார்.

இவ்வாறான தொரு பின்புலத்தில் தான், ராஜபக்ஷ அணியினர் தனியான வேட்பாளரை களமிறக்கப் போவதாக அறிவித்திருக்கின்றனர்.

ராஜபக்ஷக்களை பொறுத்த வரையில் அவர்களின் ஒரே பிரச்சனை அவர்களின் பாதுகாப்பாகும். ஒருவேளை அநுரகுமார வெற்றி பெற்றால் அவர்களின் பாதுகாப்பு முற்றிலும் கேள்விக்கு உள்ளாகி விடும். இந்த அடிப்படையில் நோக்கினால் அவர்களின் பிரதான இலக்கு ஜே.வி.பியின் வெற்றியை தடுத்து நிறுத்துவது. அது நிகழவேண்டுமாயின், அவர்களின் ஆதரவுத் தளத்தை முடிந்த வரையில் தங்களை நோக்கி குவிக்க வேண்டும்.

ஏனெனில், தற்போதைய சூழலில் அவர்களின் வாக்கு வங்கியைக் கவரக்கூடிய ஒரேயொரு கட்சி ஜே. வி. பி. மட்டும் தான். இவ்வாறானதொரு பின்புலத்தில் தமிழ்த் தேசிய தரப்புகள் என்ன செய்யப் போகின்றன. தமிழ்த் தேசிய அரசியலை பிரதிநிதித்துவம் செய்வதாகக் கூறிக்கொள்ளும் கட்சிகள் இரண்டு அணிகளாக இருக்கின்றன. இவற்றை இரண்டு அணிகள் என்று உறுதியாகக்கூற முடியாவிட்டாலும் கூட, தற்போதைய நிலையில் அவ்வாறான தோற்றம் தெரிகின்றது.

தமிழ் அரசு கட்சி ஓர் அணியில் நிற்கின்றது. அதாவது, தென்னிலங்கை வேட்பாளர்களின் தேர்தல் அறிக்கைகளை பார்த்து விட்டு முடிவெடுப்பது. தமிழ் அரசு கட்சியிலுள்ள சிலர் தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை ஆதரித்தாலும் கூட தமிழ் அரசு கட்சியாக உத்தியோகபூர்வமாக முடிவெடுக்கப்படவில்லை.

அடுத்தது, தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டுக்கு ஆதரவு வழங்கும் கட்சிகள். அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் வழமைபோல் தேர்தல் பகிஷ்கரிப்புடன் இருக்கின்றது. தேர்தல் பகிஷ்கரிப்பு தமிழ் மக்கள் மத்தியில் எடுபடப் போவதில்லை.

ஆனால் தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாடு வெற்றிபெறுமானால் அது தென்னிலங்கை அரசியல் நிகழ்ச்சி நிரலை நிச்சயம் குழப்பும். இந்தப் பின்புலத்தில் நோக்கினால் தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாடு ஒன்று தான், தென்னிலங்கையை பொறுத்தவரையில் ஒப்பீட்டடிப்படையில் சவாலானது.

இந்தத் தேர்தல் களத்தில் வெளிசக்திகளின் தலையீடுகள் எவ்வாறு அமையும் என்பதையும் ஊகிக்க மட்டுமே முடியும். ஆனால், இந்தத் தேர்தல் வெளிசக்திகளால் மிகவும் உன்னிப்பாக நோக்கப்படுவதற்கான அதிக சாத்தியங்கள் உண்டு. இவ்வாறான தொரு பின்புலத்தில் நடைபெறவுள்ள தேர்தல் நிச்சயமாக சிக்கலானதாகவும் நெருக்கடிமிக்கதாகவும் சவாலானதாகவும் இருக்கப் போவது நிச்சயமானது.

# பொது வேட்பாளர் தோல்வியின் பின் அரசியல் தீர்வு குறித்து அரசாங்கத்துடன் பேச்சு நடத்த முடியாத நிலையேற்படும்



2015ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலைப் போன்று இம்முறை ஜனாதிபதித் தேர்தலிலும் தமிழ் மக்களின் வாக்குகள் மிக முக்கியமானவையாகும். அதன் விளைவாக தற்போது நாம் பேரம் பேசக்கூடிய வலுநிலையில் இருக்கின்றோம். அவ்வாறிருக்கையில் அந்த ஆற்றலைப் புறந்தள்ளி, பொதுவேட்பாளர் ஒருவரைக் களமிறக்குவது பொறுப்பற்ற செயலாகும் எனச் சுட்டிக் காட்டியிருக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன்,

இத்தேர்தலில் தமிழ் பொதுவேட்பாளர் தோல்வியடைந்ததன் பின்னர், ஆட்சி பீடமேறும் பெரும் பான்மையின ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கத்துடன் தமிழர்களுக்கான தீர்வு குறித்து பேச்சுவார்த்தைகளை நடாத்த முடியாத நிலையும் ஏற்படும் விசனம் வெளியிட்டுள்ளார்.

9ஆவது ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 21 ஆம் திகதி நடாத்தப்படும் எனவும், ஓகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனுக்களைத் தாக்கல் செய்யமுடியும் எனவும் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்திருக்கின்றது. அதன்படி இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் வட, கிழக்கு தமிழ் மக்கள் சார்பில் பொதுவேட்பாளர் ஒருவரைக் களமிறக்குவது குறித்த பேச்சுவார்த்தைகள் வலுப்பெற்று, அதனை முன்னிறுத்தி சில தமிழ் அரசியல் கட்சிகள் மற்றும் சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகளுக்கு இடையிலான இணக்கப்பாட்டு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கின்றது.

ஜனாதிபதித் தேர்தலில் தமிழர்கள் சார்பில் களமிறக்கப்படும் பொதுவேட்பாளரால் வெல்ல முடியாத போதிலும், சுயநிர்ணய உரிமையுடன் கூடிய சமஷ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வு உள்ளடங்கலாக தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளை சர்வதேசத்திடம் கூறுவதற்கான களமாக இதனைப் பயன்படுத்திக் கொள்ள முடியும் எனவும் தமிழ் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் ஏற்கனவே தெரிவித்திருந்தனர்.

இருப்பினும் மேற் குறிப்பிட்ட உடன்படிக்கையில் இலங்கைத் தமிழரசுக் கட்சிப் பிரதிநிதிகள் எவரும் கைச்சாத்திடவில்லை. தமிழ் பொதுவேட்பாளரை ஆதரிப்பதா, இல்லையா என்பது குறித்து இதுவரையில் தமிழரசுக் கட்சி எவ்வித தீர்மானத்தையும் மேற்கொள்ளாத போதிலும், பொதுவேட்பாளரைக் களமிறக்கும் தீர்மானத்தை தனிப்பட்ட முறையில் தான் ஆதரிப்பதாக அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் தெரிவித்துள்ளார். ஆனால் இத்தீரமானத்தை முற்றுமுழுதாக நிராகரிப்பதாக எம்.ஏ.சுமந்திரன் ஏற்கனவே அறிவித்திருந்தார்.

இவ்வாறானதொரு பின்னணியில், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவிருக்கும் வேட்பாளர்களுடன் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்குத் தாம் தீர்மானித்திருக்கும் நிலையில், அதன் ஓரங்கமாக சஜித் பிரேமதாஸ மற்றும் அநுரகுமார திஸாநாயக்க ஆகியோருடன் ஏற்கனவே பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டிருப்பதாக சுட்டிக்காட்டிய சுமந்திரன், எதிர் வருங்காலத்திலும் தமிழர்களுக்கான தீர்வு குறித்து வேட்பாளர்களுடன் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்படும் எனத் தெரிவித்தார்.

அதேவேளை இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் பொதுவேட்பாளர் ஒருவரைக் களமிறக்கி, தமிழ்மக்களின் கோரிக்கைகளை முன்வைப்பதன் ஊடாக அக்கோரிக்கைகள் பலமற்றதாகி விடும் எனக் கரிசனை வெளியிட்ட அவர், இம்முறை போன்று அடுத்தடுத்த ஜனாதிபதித் தேர்தல்களிலும் தமிழ்மக்கள் சார்பில் பொது வேட்பாளர் ஒருவர் களமிறக்கப்படுவாரா? எனவும் கேள்வி எழுப்பினார்.

'2015ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலைப் போன்று இம்முறை ஜனாதிபதித் தேர்தலிலும் தமிழ்மக்களின் வாக்குகள் மிகமுக்கியமானவையாகும். அதன்விளைவாக தற்போது நாம் பேரம்பேசக்கூடிய வலுநிலையில் இருக்கின்றோம்.

அவ்வாறிருக்கையில் அந்த ஆற்றலைப் புறந்தள்ளி, பொதுவேட்பாளர் ஒருவரைக் களமிறக்குவது பொறுப்பற்ற செயலாகும்' என்று தெரிவித்த சுமந்திரன், அதுமாத்திரமன்றி இத்தேர்தலில் தமிழ் பொதுவேட்பாளர் தோல்வியடைந்ததன் பின்னர், ஆட்சி பீடமேறும் பெரும்பான்மையின ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கத்துடன் தமிழர்களுக்கான தீர்வு குறித்து பேச்சுவார்த்தைகளை நடாத்தமுடியாத நிலையும் ஏற்படும் என விசனம் வெளியிட்டார். மேலும் அவரும், பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியனும் இணைந்து விடுத்த அழைப்புக்கு அமைய சில ஜனாதிபதி வேட்பாளர்கள் தமிழர்களுக்கான அரசியல் தீர்வு உள்ளிட்ட முக்கிய கேள்விகளுக்கு பொதுமேடை ஒன்றில் பதிலளிப்பதற்கு இணங்கியிருப்பதாகவும், அவர்களுடனும், ஏனைய வேட்பாளர்களுடனும் கலந்துரையாடியதன் பின்னரே இதனை எவ்வாறு நடைமுறைப்படுத்துவதெனத் தீர்மானிக்கப்படும் எனவும் சுமந்திரன் தெரிவித்தார்.


## கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

### கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை

✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது

✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.

✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

**Sri Vallipuranathar**

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: 416.439.0224, Cell: 416.450.5011

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com



# ஜனாதிபதித் தேர்தல் களம்:- திரட்டுவதா? சிதறடிப்பதா?

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
- நிலாந்தன் -

இம்முறை ஜனாதிபதி தேர்தல் முடிவுகள் எதிர்வுகூற முடியாதவை மட்டுமல்ல, ஊகிக்க முடியாதவைகளுந்தான் என்று ஒரு மேற்கத்திய தூதராக அதிகாரி சொன்னார். இலங்கைதீவின் நவீன வரலாற்றில் குறிப்பாக ஜனாதிபதி முறைமை அமல்படுத்தப்பட்ட பின் ஒரு பிரதான வேட்பாளர் அதுவும் ஜனாதிபதியாக இருப்பவர், சுயேட்சையாக கட்டுப்பணம் செலுத்தியிருப்பது என்பது இது தான் முதல் தடவை. முன்னெப் பொழுதும் தேர்தல் களத்தில் இந்த அளவுக்கு நிச்சயமின்மைகள் நிலவியதில்லை. இது எதை காட்டுகிறது?

போட்டி அதிகமாக இருப்பதை மட்டும் காட்டவில்லை பெரும் பான்மையானவர்களால் அங்கீகரிக்கப்பட்ட தலைவர் யாரும் இல்லை என்பதையும் காட்டுகிறது.

நாடாளுமன்றத்தில் தாமரை மொட்டு கட்சிதான் பலமாக உள்ளது. அதன் தயவில் தான் ஜனாதிபதி தங்கியிருக்கிறார். ஆனாலும் அவரை வரும் ஜனாதிபதி தேர்தலில் தனது வேட்பாளராக நிறுத்த தாமரை மொட்டுக் கட்சி தயாரில்லை என்று தெரிகிறது. கடந்த பல மாதங்களாக அது தொடர்பாக நடந்த பேச்சுவார்த்தைகள் வெற்றியளிக்கவில்லை என்றும் தெரிகிறது.

வெற்றியளிக்கவில்லை மட்டுமல்ல அவை முரண்பாடுகளை தவிர்க்க உதவவில்லை என்றும் தெரிகிறது.அண்மையில் நாமல் ராஜபக்ச ஜனாதிபதி தொடர்பாக தெரிவித்த கருத்துக்கள் அதைத்தான் காட்டுகின்றன. ரணில், தமது கட்சியைப் பிளவுபடுத்த முயற்சிக்கிறார் என்ற பொருள்பட நாமல் கருத்து தெரிவித்திருந்தார்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தை பிளவுபடுத்தியதைப் போல அவர் தமது கட்சி பிரமுகர்களைக் கழட்டி எடுக்க முயற்சிக்கிறார் என்ற பொருள்பட நாமல் பேசியிருக்கிறார். கிடைக்கும் தகவல்களின்படி தாமரை மொட்டுக் கட்சியைச் சேர்ந்த பலர் ரணிலை நோக்கிப் போகலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மனோகணேசன் தனது முகநூற்பதிவில் கூறியது போல, ராஜபக்சக்கள் ரணிலை தமது வேட்பாளராக்கினால் தம்மைப் பாதுகாக்கலாம் ஆனால் கட்சியைக் காப்பாற்ற முடியாது. ரணில் கட்சியைச் சாப்பிட்டு விடுவார் என்பதே சரி.

ஒரு சுயேட்சை வேட்பாளராகக் களமிறங்கி வளர்ச்சிப் போக்கில் பல்வேறு தரப்புக்களின் பொது வேட்பாளராக அவர் மாறக்கூடிய நிலைமைகள் தெரிகின்றன. அதன் மூலம் ராஜபக்சக்களின் தவறுகளுக்குப் பொறுப்புக் கூறத் தேவையில்லாத ஒரு வெற்றியைப் பெற அவர் முயற்சிக்கிறாரா?

இப்போதுள்ள நிலைமைகள் இதே போக்கில் தொடர்ந்தும் வளர்ந்து சென்றால் தேர்தல் களத்தில் மூன்றுக்கும் மேற்பட்ட பிரதான வேட்பாளர்கள் நிற்க முடியும்.சரத் பொன்சேகாவும் விஜயதாச ராஜபக்சவும் ஜனாதிபதியின் நோக்கங்களை நிறைவேற்றும் டம்மி வேட்பாளர்கள் என்ற ஒரு கருத்தும் தென்னிலங்கையில் உண்டு. சரத் பொன்சேகா அனுரவிற்குப் போகக் கூடிய படைத்தரப்பினரின் வாக்குகளை கவர்ந்து எடுப்பார். அவரும் விஜயதாச ராஜபக்ஸவும் ரணில் விக்கிரமசிங்கவின் போட்டியாளர்களுக்கு கிடைக்கக் கூடிய வாக்குகளை கவரும் நோக்கத்தோடு களமிறக்கப்பட்டார்களா என்ற சந்தேகங்களும் உண்டு. எதுவாயினும் தென்னிலங்கையில் தேர்தல் களம் முன்னெப்பொழுதையும் விட நிச்சயமற்றதாகக் காணப்படுகின்றது. இது சிங்கள வாக்காளர்களைக் குழப்பும் சிதறடிக்கும். விளைவாக தெரிவு செய்யப்படப் போகும் ஜனாதிபதி பருமனில் கூடிய பெரும்பான்மையோடு ஆட்சிக்கு வருவாரா என்பதும் சந்தேகம்தான்.அவருக்குக் கிடைக்கக்கூடிய சிங்களமக்களின் ஆணை ஒப்பீட்டளவில் பலவீனமாகவே இருக்கும்.

இந்தப் பின்னணியில் தமிழ்த் தரப்பில் ஒரு பொது வேட்பாளர் தமிழ் வாக்குகளை கவர்வாராக இருந்தால் தெரிவு செய்யப்படப்போகும் ஜனாதிபதி மிகப் பலவீனமான ஆணையோடு பதவிக்கு வருவார். அவருக்கு தமிழ் மக்களின் ஆணையும் கிடைக்காது கிடைக்கக் கூடிய சிங்கள முஸ்லீம் மக்களின் அணையும் பலவீனமாக இருக்கலாம்.

இது அடுத்த ஆண்டு தென்னிலங்கை அரசியலில் எத்தகைய விளைவுகளை ஏற்படுத்தும்? பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை வெற்றிகரமாக மீட்டெடுப்பது என்று சொன்னால் அதற்குப் பலமான ஒரு அரசுத் தலைவர் வேண்டும். ஆனால் ஒப்பீட்டளவில் பலவீனமான மக்கள் ஆணையோடு தெரிவு செய்யப்படக்கூடிய ஒரு ஜனாதிபதி பொருளாதார நெருக்கடி தொடர்பில் துணிகரமான முடிவுகளை எடுக்கக் கூடியவராக இருப்பாரா? அவ்வாறு பொருளாதாரத்தை சீர்



செய்ய முடியாவிட்டால் நாடு இன்னும் கொதிநிலைக்கு போகும். இது முதலாவது விடயம்.

இரண்டாவது விடயம், அவ்வாறு ஒப்பிட்டுளவில் பருமன் குறைந்த ஒரு வெற்றியை பெறக்கூடிய புதிய ஜனாதிபதி நாடாளுமன்றத் தேர்தலும் உட்பட ஏனைய தேர்தல்களை உடனடியாக வைக்கக்கூடிய நிலைமைகள் இருக்குமா?

ஏனென்றால் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறப்போகும் கூட்டு ஒரு பொதுத் தேர்தலை நடத்தி அந்த வெற்றியை மேலும் உறுதிப்படுத்தவும் பலப்படுத்தவும் முயற்சிக்கும்.ஆனால் தெரிவு செய்யப்பட போகும் ஜனாதிபதிக்கு கிடைக்க கூடிய வெற்றி ஒப்பீட்டளவில் பலமாக இல்லையென்றால் அந்தக்கூட்டு பொதுத் தேர்தலை வைத்து ஒரு விசப்பரீட்சையைச் செய்யுமா? அல்லது பருமனில் சிறியது ஆனாலும் அந்த வெற்றி அடுத்தடுத்த தேர்தல்களில் பிரதிபலிப்புகளை ஏற்படுத்தும் என்று நம்பி தேர்தல்களை வைக்கக்கூடுமா? அல்லது அப்படிப்பட்டதோர் சூழலில் ஒரு தேர்தலை வைத்தால் பலமான பெரும்பான்மையைக் கொண்ட ஒரு நாடாளுமன்றம் தெரிவு செய்யப்படுமா? எனவே கூட்டிக்கழித்துப் பார்த்தால் தென்னிலங்கையில் இப்பொழுது காணப்படும் போட்டி நிலை எனப்படுவது அல்லது நிச்சயமற்ற நிலை எனப்படுவது அல்லது ஊகிக்கமுடியாத நிலை எனப்படுவது நாடு ஒரு நிச்சயமற்ற ஆண்டை நோக்கிச் செல்கிறது என்ற ஊகங்களைப் பலப்படுத்துமா?

இதில் தமிழ்மக்கள் எடுக்கக் கூடிய முடிவுகள் நிர்ணயகரமானவைகளாக இருக்கும் என்பது வெளிப்படையாகத் தெரிகிறது. தமிழ்மக்கள் எந்த ஜனாதிபதி வேட்பாளருக்கு அதிகமாக வாக்களிக்கிறார்களோ அவர் பெறக் கூடிய வெற்றியின் பருமன் அதிகரிக்கும். அது அதன் தர்க்கபூர்வ விளைவுகளை தென்னிலங்கையில் ஏற்படுத்தும். இப்படிப்பட்டதோர் நிர்ணயகரமான அரசியல் சூழலில் தமிழ்மக்கள் என்ன செய்ய வேண்டும்? தென்னிலங்கை வேட்பாளர்கள் என்ன செய்ய வேண்டும்?

தமிழ்மக்கள் தென்னிலங்கை அரசியலுக்குப் பதில் வினையாற்றும் ஓர் அரசியலை தெரிந்தெடுப்பதா? அல்லது செயல் முனைப்புடன் இயங்கி தென்னிலங்கை வேட்பாளர்களை தங்களை நோக்கி வரச்செய்வதா? தென்னிலங்கை வேட்பாளர்களின் தேர்தல் அறிக்கைகளுக்காகக் காத்திருக்க வேண்டும் என்று கூறும் தமிழ் அரசியல்வாதிகள் அவர்களோடு பேரம் பேசலாம் என்று நம்புகிறார்கள். அப்படியென்றால் தென்னிலங்கை வேட்பாளர்களில் யாராவது ஒற்றை ஆட்சி முறைமையை மாற்றி சமஸ்ரியை ஏற்றுக் கொள்ளத் தயாரா? இல்லையென்றால் எது தொடர்பில் அவர்களோடு பேரம் பேசுவது?

அடுத்தது அவர்கள் தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிடும்வரை காத்திருப்பது என்பது தென்னிலங்கையின் நகர்வுகளுக்காகக் காத்திருக்கும் ஒரு அரசியல். இது சரியா?

அடுத்தது அவர்கள் எப்பொழுது தேர்தல் அறிக்கையை வெளியிடுவார்கள்? பெரும்பாலும் வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட பின்னர் தான். அப்பொழுது அவர்களுடைய தேர்தல் அறிக்கைகளில் பேரம் பேசக்கூடிய வாய்ப்புகள் இல்லையென்றால் என்ன முடிவை எடுப்பது? எந்த முடிவையும் எடுக்க முடியாது. யாரோ ஒருவருடன் ஏதோ ஒரு டீலுக்குப் போவதைத் தவிர. அதாவது தென்னிலங்கை வேட்பாளர்களின் தேர்தல் அறிக்கைகளுக்காகக் காத்திருப்பது என்பது அதன் தர்க்கபூர்வ விளைவைப் பொறுத்தவரை டீலுக்குக் காத்திருப்பது தான். இனப்பிரச்சினைக்கான தீர்வைக் குறித்துப் பேரம் பேசுவதற்காக அல்ல.

அவர்கள் தேர்தல் அறிக்கைகளுக்காக காத்திருக்கவில்லை.முடிவெடுக்காமல் காலத்தைக் கடத்துகிறார்கள் என்பதே சரி. தேசியவாத அரசியல் எனப்படுவது அதன் பிரயோக வடிவத்தில் பிறத்தியாரின் முடிவுகளுக்காக காத்திருப்பது அல்ல.தானே முடிவெடுத்து, அதற்காக உழைத்து பிறத்தியாரை தன்னை நோக்கி வரச்செய்வது. தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற தெரிவு அதுதான்.

ஆனால் பொது வேட்பாளரை ஆதரிப்பது என்ற முடிவை பொறுத்திருந்து எடுக்க முடியாது. ஏனென்றால் கடந்த 15 ஆண்டுகளாக சிதறிக் கொண்டு போகும் ஒரு மக்கள் கூட்டத்தை கூட்டிக் கட்டுவது என்ற முடிவை எப்பொழுதோ எடுத்திருந்திருக்க வேண்டும். அதை இனிமேல் தான் தென்னிலங்கை வேட்பாளர்களின் முடிவைக் கண்டு எடுப்பது என்பது தந்திரோபாயத் தவறு மட்டுமல்ல, தோல்விகரமானது.

தங்களை ஒரு தேசமாகக் கருதும் தமிழ்மக்கள் வெளியாருக்காகக் காத்திருப்பதை விடவும் தங்களை செயல் முனைப்போடு கட்டியெழுப்பது தான் தேசியவாத அரசியல். அது தான் தமிழ்ப் பொது வேட்பாளர். எனவே தென்னிலங்கை வேட்பாளர்களின் தேர்தல் விஞ்ஞாபனங்களுக்காக காத்திருப்பது என்பது திட்டவட்டமாக தமிழ்ப் பொது வேட்பாளரை நிராகரிப்பது தான். தமிழ்ப் பொது வேட்பாளரை நிராகரிப்பது என்பது தமிழ் அரசியல் சக்தியை ஒரு மையத்தில் குவிக்கும் செயற்பாட்டுக்கு எதிரானது தான்.

அதாவது தமிழ் மக்களை ஐக்கியப் படுத்திப் பலப்படுத்தும் செயற்பாட்டுக்கு எதிரானது.இதை இன்னும் அதன் தர்க்கபூர்வ விளைவின் அடிப்படையில் கூறின் தமிழ் மக்களைச் சிதறடிக்கும் சக்திகளுக்குச் சேவை செய்வது.

எவ்வாறெனில் ஒரு பொது வேட்பாளரை ஆதரிக்காவிட்டால் சில அரசியல்வாதிகள் தமிழ் வாக்குகளை சஜித்தை நோக்கிச் சாய்த்துச் செல்வார்கள். இன்னொரு பகுதி குறிப்பாக ஆங்கிலம் தெரிந்த படித்த நடுத்தர வர்க்கும், ரணில் நாட்டின் பொருளாதாரத்தை ஒப்பீட்டளவில் நிமிர்த்தியிருப்பதாகக் கருதி அவருக்கு வாக்களிக்கும். இன்னொரு பகுதி மாற்றத்தை வேண்டி அனுரவுக்கு வாக்களிக்கும். ஒரு பகுதி தேர்தலைப் பகிஷ்கரிக்கும். இவ்வாறு பலவாறாக தமிழ் வாக்குகள் சிதறும்போது ஒரு பகுதி தமிழ் வாககாளர்கள் சலிப்படைவார்கள் வாக்களிப்பில் ஆர்வமிழப்பார்கள். அதாவது ஒரு வாக்களிப்பு அலை ஏழாது. அது வாக்களிப்பில் கலந்து கொள்வோரின் தொகையைக் குறைக்கும் மொத்தத்தில் தமிழ் வாக்குகள் பலவாகச் சிதறும். எனவே தமிழ்ப் பொது வேட்பாளர் அல்லாத எந்த ஒரு தெரிவும் தமிழ் வாக்குகளைப் பலவாகச் சிதறடிக்கும்

இப்பொழுது மிக எளிமையான ஒரு கேள்வி தான் உண்டு. தமிழ் மக்களை சிதறு தேங்காயாகச் சிதறடிப்பதா? அல்லது ஒவ்வொரு நெல்மணியாகக் கூட்டிக் கட்டுவதா?

# 13வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! ஆகஸ்ட் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.

தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா

செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)

பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)

உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)

உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)

பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்

இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக் குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

13 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 13 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் – உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை – நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒரு நாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும். புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் – மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக – எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை – மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ? ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

”தர்மம் தலை காக்கும்” “கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

27 யூலை 2024 – 09 ஆகஸ்ட் 2024 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது.

கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதரவோடு கடந்த செப்டம்பர் முதல் 13வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600**

## 23வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி விநாசித்தம்பி தங்கம்மா

புங்குடுதீவு 10ம்வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி விநாசித்தம்பி தங்கம்மா அவர்களது 23வது ஆண்டு நினைவு நாள் 28 யூலை 2024 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரின் குடும்பத்தினர் அன்னாரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி விநாசித்தம்பி தங்கம்மா அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து முல்லைத்தீவு பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## ஆடி அமாவாசை உபயம்



### திரு சின்னையா நல்லதம்பி

யாழ்ப்பாணம் இணுவிலைச் சேர்ந்த திரு சின்னையா நல்லதம்பி அவர்களது நினைவாக அன்னாரது குடும்பத்தினர் 03 ஆகஸ்ட் 2024 சனிக்கிழமை ஆடி அமாவாசை விரத நாளையொட்டி அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு சின்னையா நல்லதம்பி அவர்களை நினைவு கூர்ந்து ஆடி அமாவாசை விரத நாளில் பிராத்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்கு ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திககின்றார்கள்.

## 20வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு தம்பிப்பிள்ளை தம்பிஐயா

புளியக்கூடல் சந்தி வேலணையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்து தாயகத்தில் இறைபதம் அடைந்த திரு தம்பிப்பிள்ளை தம்பிஐயா அவர்களது 20வது ஆண்டு நினைவு நாள் 30 யூலை 2024 செவ்வாய்க்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரை நினைவு கூர்ந்து அவரது குடும்பத்தினர் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள். அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்கு ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திககின்றார்கள்.


## 10வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு சின்னத்துரை கந்தையா

மாரீசன்கூடல் இளவாலையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு சின்னத்துரை கந்தையா அவர்களது பத்தாவது ஆண்டு நினைவு நாள் 03 ஆகஸ்ட் 2024 சனிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு சின்னத்துரை கந்தையா அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 35வது ஆண்டு நினைவஞ்சலி



### செல்வன் சிவசுப்பிரமணியம் மணிவர்மன்

பருத்தித்துறையைச் சேர்ந்த செல்வன் சிவசுப்பிரமணியம் மணிவர்மன் (மாவீரன் கப்டன் ஜேம்ஸ்) அவர்களது 35வது ஆண்டு நினைவு நாள் 07 ஆகஸ்ட் 2024 புதன் கிழமையாகும். அன்றைய நாளுக்காக அன்னாரின் பெற்றோர்களும் உறவுகளும் அன்னாரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள் செல்வன் சிவசுப்பிரமணியம் மணிவர்மன் அவர்களை நினைவு கூர்ந்தும் அவரது கனவு நனவாகவும் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 2வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு தவசீலன் சுப்பையா

கோப்பாயைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்து தாயகத்தில் அமரத்துவமடைந்த திரு தவசீலன் சுப்பையா அவர்களது இரண்டாவது ஆண்டு நினைவு நாள் 06 ஆகஸ்ட் 2024 செவ்வாய்க்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு தவசீலன் சுப்பையா அவர்களை நினைவு கூர்ந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு இந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்




22 யூலை 2024திங்கட்கிழமை றொன்ரோ கனடாவில் வசிக்கும் திரு யேசுதாசன் அன்ரனிப்பிள்ளை அவர்களது 70வது பிறந்த நன்நாளாகும். அன்றைய நாளுக்காக திரு யேசுதாசன் அன்ரனிப்பிள்ளை அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து 27 யூலை 2024 சனிக்கிழமை பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்



28 யூலை 2024 ஞாயிற்றுக்கிழமை புங்குடுதீவு 10ம் வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி விநாசித்தம்பி தங்கம்மா அவர்களது 23வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரை நினைவு கூர்ந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



30 யூலை 2024 செவ்வாய்க்கிழமை புளியங்கூடல் சந்தி வேலணையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்து தாயகத்தில் அமரத்துவம் அடைந்த திரு தம்பிப்பிள்ளை தம்பிஐயா அவர்களது 20வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரை நினைவு கூர்ந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



30 யூலை 2024 செவ்வாய்க்கிழமை கொழும்பைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டுருந்த வதனி என்று என்பாக அழைக்கப்படும் திருமதி பிறிக்டிக்கா சுகுமார் அவர்களது 13வது ஆண்டு நினைவு நாளாகும். அன்னாரது குடும்பத்தினர் அவரை நினைவு கூர்ந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




01 ஆகஸ்ட் 2024 வியாழக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி பிரசாத் ஆர்த்தி இணையர்களின் செல்வப்புதல்வன் ஆதிரன் தனது பெற்றோர்களுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்



02 ஆகஸ்ட் 2024 வெள்ளிக்கிழமை கனடாவில் வசிக்கும் திருமதி கோணேஸ்வரன் சுதர்சினி அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றைய தினம் திருமதி கோணேஸ்வரன் சுதர்சினி அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



02 ஆகஸ்ட் 2024 வெள்ளிக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி சுந்தரலிங்கம் கலாவதி இணையர்கள் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்



03 ஆகஸ்ட் 2024 சனிக்கிழமை ஆடி அமாவாசை விரத உபயமாக இணுவிலைச் சேர்ந்த திரு சின்னையா நல்லதம்பி அவர்களது நினைவாக அன்னாரது குடும்பத்தினர் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



03 ஆகஸ்ட் 2024 சனிக்கிழமை மாரீசன்கூடல் இளவாலையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு சின்னத்துரை கந்தையா அவர்களது 10வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரை நினைவு கூர்ந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



03 ஆகஸ்ட் 2024 சனிக்கிழமை ஆடி அமாவாசை விரத உபயமாக ஊரெழுவைச் சேர்ந்த திரு சின்னப்பு நல்லையா அவர்களது நினைவாக அன்னாரது குடும்பத்தினர் செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




04 ஆகஸ்ட் 2024 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் வசிக்கும் திருமதி சோமேஸ்வரி குமாரசுவாமி அவர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்புஉணவு வழங்கி மகிழ்ந்தார்



06 ஆகஸ்ட் 2024 செவ்வாய்க்கிழமை கோப்பாயைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்தவரும் தாயகத்தில் அமரத்துவம் அடைந்தவருமான திரு தவசீலன் சுப்பையா அவர்களது 2வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரை நினைவு கூர்ந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



07 ஆகஸ்ட் 2024 புதன்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி சோமநாத் துர்க்கா தம்பதிகளின் செல்வப்புதல்வி ஜெசியா சோமநாத்தின் 7வது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வி ஜெசியா சோமநாத் தனது பெற்றோர்கள் சகோதரங்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்



07 ஆகஸ்ட் 2024 புதன்கிழமை பருத்தித்துறையைச் சேர்ந்த கப்டன் ஜேம்ஸ் (மாவீரன்) என்று அன்பாக அழைக்கப்படும் செல்வன் மணிவர்மன் சிவசுப்பிரமணியம் அவர்களது 35வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரை நினைவு கூர்ந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



09 ஆகஸ்ட் 2024 வெள்ளிக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி சங்கர் ஜெலியா தம்பதிகளின் செல்வப்புதல்வன் டெல்ரனின் 5வது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் டெல்ரன் தனது பெற்றோர்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்

# உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகை புனிதபூமி அன்பு இல்லக் குழந்தைகளுக்காக 13வது ஆண்டாக நடாத்திய தமிழும் இசையும் இராப்போசன விருந்தும்





















# உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகை புனிதபூமி அன்பு இல்லக் குழந்தைகளுக்காக 13வது ஆண்டாக நடாத்திய தமிழும் இசையும் இராப்போசன விருந்தும்



















# ஐந்தாவது
## இனிய பிறந்த நன்நாள் வாழ்த்து



### செல்வன் டெல்ரன் ரஞ்ஜித் சங்கர்

கனடாவில் வசிக்கும் திரு திருமதி சங்கர் ஜெலியா தம்பதிகளின் செல்வப்புதல்வன் டெல்ரன் ரஞ்சித் சங்கரின் ஐந்தாவது பிறந்த நன்நாள் 09 ஆகஸ்ட் 2024 வெள்ளிக்கிழமையாகும். அன்றைய தினம் தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடிய செல்வன் டெல்ரன் ரஞ்சித் சங்கர் தனது பெற்றோர்கள், பேரன் பேத்திமாரோடு இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்கும் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார். அகவை ஐந்து காணும் செல்வன் டெல்ரன் பல்கலையும் கற்றுப் பல்லாண்டு வாழ்கவென வாழ்த்தும் அவரது பெற்றோர்கள், உற்றார், உறவினர்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் வாழ்த்துகின்றார்கள். வாழ்க வளமுடனும்! தமிழுடனும்!

# நான்காவது
## இனிய பிறந்த நன்நாள் வாழ்த்து



### செல்வன் Micaiah நகுல் சிவசோதி

கனடாவில் வசிக்கும் செல்வன் Micaiah நகுல் சிவசோதியின் நான்காவது பிறந்த நன்நாள் 17 யூலை 2024 புதன்கிழமையாகும். அன்றைய தினம் தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடிய செல்வன் Micaiah நகுல் சிவசோதி அன்றைய நாளுக்காக 21 யூலை 2024 ஞாயிற்றுக்கிழமை தனது பெற்றோர்கள், பேரன் பேத்திமாரோடு இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்கும் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார். அகவை நான்கு காணும் செல்வன் Micaiah பல்கலையும் கற்றுப் பார்போற்றும் பைந்தமிழ் மகனாக வாழ்கவென வாழ்த்தும் அவரது பெற்றோர்கள், உற்றார், உறவினர்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் வாழ்த்துகின்றார்கள். வாழ்க வளமுடனும்! தமிழுடனும்!





வங்கிக் கடன் தொல்லைகளிலிருந்து விடுதலை

NEW LIFE FRESH START

Save 80%

- கடன் 80% குறைய நடவடிக்கை
  Reduce your debts upto 80%.
- கடனுக்கு விடுவிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுதப்படும்
  Stop all interest on your debts.
- கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள், சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
  Stop collection calls, legal action & garnishments.
- உங்கள் சொத்துகள் பாதுகாக்கப்படும்.
  Protect all your assets (House, Car, RRSP, RESP).
- மாதாந்த ரீதியில் அனைத்துக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்.
  Make one monthly patment to all of your creditors.
- வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்.
  GIve you solutions without bankruptcy.

CRC CREDIT RECOVERY CANADA

10 Milner Business Court, Unit 300
Website: www.creditrecoverycanada.ca

Suren Sornalingam BBA
Post Graduate Diploma In Business Management
Federal Government Registered & Certified (BIA)
Insolvency Counsellor.
Member of Canadian Insolvency Foundation

Over 20 Years Experience in the field of Insolvency



Tel: 647-274-2832
Email: info@creditrecoverycanada.ca

# தென்னிலங்கைக்காக காத்திருப்பது?





**கட்டுரையாளர்:**
**யாழ்ப்பாணத்தில் இருந்து**
**- நிலாந்தன் -**



தமிழ் மக்கள் மீண்டும் ஒரு முறை தீர்மானிக்கும் சக்தியாக வரக் கூடிய வாய்ப்பு ஜனாதிபதித் தேர்தலில் உண்டு என்று பரவலாக எதிர்பார்க்கப்படுகிறது. தூதரகங்களுடனான சந்திப்புகளின் போது தமிழ் அரசியல்வாதிகளுக்கு அது சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது. தமிழ் மக்கள் யாரை ஆதரிக்கிறார்களோ அந்த தென்னிலங்கை வேட்பாளர் வெற்றி வாய்ப்புகளை அதிகமாகக் கொண்டிருப்பார் என்று ஒரு எதிர்பார்ப்பு. யாழ்ப்பானத்துக்கு வருகை தந்த ரணில் விக்கிரமசிங்கவும் அப்படித் தான் நம்புகிறார் போலும்.

தென்னிலங்கையை யார் ஆள்வது என்பதனை தமிழ் மக்கள் தீர்மானிக்கும் ஒரு அரசியல் சூழல் இந்த முறை மட்டும் தான் ஏற்பட்டிருக்கிறது என்பதல்ல. கடந்த 15 ஆண்டுகளில் ஒவ்வொரு ஜனாதிபதி தேர்தலின் போதும் அது ஏற்பட்டது. 2018 ஆம் ஆண்டு மைத்திரிபால சிறிசேன முன்னெடுத்த யாப்புச் சதிப் புரட்சியின் போதும் அப்படி ஒரு நிலைமை காணப்பட்டது. யாப்புச் சதிப் புரட்சியில் ரணில் விக்கிரமசிங்கவை பாதுகாத்தது தமிழ் முஸ்லிம் பிரதிநிதிகள் தான்.

அவ்வாறு சிறிய தேசிய இனங்கள் ஒரு பெரிய தேசிய இனத்தின் ஜனாதிபதியைத் தீர்மானிக்கும் நிலை வரக்கூடாது என்று ராஜபக்சங்கள் நன்கு திட்டமிட்டு உழைத்ததன் விளைவு தான் அதையடுத்து வந்த ஜனாதிபதி தேர்தலில் அதாவது கடந்த ஜனாதிபதி தேர்தலில் ராஜபக்ச குடும்பம் பெற்ற மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆகும்.

எனினும் மறுபடியும் இப்பொழுது, ஜனாதிபதியைத் தமிழ் மக்கள் தீர்மானிக்கும் ஒரு கட்டம் வந்திருக்கின்றதா? அப்படியென்றால் தமிழ் மக்கள் எப்படிப்பட்ட முடிவை எடுக்க வேண்டும்? அல்லது தமிழ் மக்கள் ஒரு தீர்மானிக்கும் சக்தியாகக் காணப்படும் தேர்தல் களத்தில் தென்னிலங்கை வேட்பாளர்கள் என்ன முடிவு எடுக்க வேண்டும்?

தமிழ் மக்கள் தென்னிலங்கை வேட்பாளர்கள் தங்களை நோக்கி மேலும் இறங்கி வரும் விதத்தில் தம்மை மேலும் பலப்படுத்த வேண்டும். அதே சமயம்,தென்னிலங்கை வேட்பாளர்கள் தமிழ் மக்களை நோக்கி இறங்கி வர வேண்டும்.

அதற்குப் பின்வரும் காரணங்களைச் சொல்லலாம். முதலாவதாக, அது தான் பெரிய இனம். ஆட்சி அதிகாரத்தைக் கொண்டிருக்கும் இனம். அரசுடைய தரப்பு. எனவே அது தான் முதலில் அரசற்ற தரப்பை நோக்கி வர வேண்டும். இரண்டாவது, அதுதான் ஒடுக்கிய இனம். கடந்த ஒரு நூற்றாண்டுக்கு மேலாக தமிழ் மக்களை ஒடுக்கியதும் இன அழிப்பு செய்ததும் அவர்கள்தான். எனவே அதற்குரிய பரிகாரமாக அவர்கள் தான் இறங்கி வர வேண்டும்.

சாதாரணமாக ஒரு வியாபாரத்தில் பேரம் என்று வரும் பொழுது யாருடைய உதவி தேவைப்படுகிறதோ அவர்களை நோக்கி உதவி கேட்கும் தரப்புத்தான் இறங்கி வர வேண்டும். எனவே தென்னிலங்கை வேட்பாளர்கள் தான் தமிழ் மக்களை நோக்கி இறங்கி வந்து தாங்கள் என்ன தர முடியும் என்பதனை தெளிவாகக் கூற வேண்டும். அண்மை வாரங்களாக தென்னிலங்கை வேட்பாளர்கள் தமிழ் அரசியல்வாதிகளை வீடு வரை வந்து சந்திக்கின்றார்கள். இக் கட்டுரை எழுதப்படுகையில் ரணில் யாழ்ப்பாணத்தில் நிற்கிறார்.

ஆனால் அவ்வாறு தமிழர்களை நோக்கி வரும் யாருமே தமிழ் மக்களுக்கு எந்த ஒரு நம்பிக்கையூட்டும் வாக்குறுதியையும் கொடுக்கவில்லை என்பது தான் இலங்கைதீவின் துயரம்.தாங்கள் எதைத் தர முடியும் என்பதனை அவர்கள் வெளிப்படையாக முதலில் கூற வேண்டும்.

கடந்த ஒரு நூற்றாண்டு முழுவதும் உடன்படிக்கைகள் முறிக்கப்பட்ட அனுபவம் தமிழ் மக்களுக்கு உண்டு. அவ்வாறு உடன்படிக்கைகள் முறிக்கப்படும் பொழுதெல்லாம் முதற் பலியாவது தமிழ் மக்கள்தான். அது மட்டுமல்ல இலங்கைத்தீவில் இதுவரையிலும் முன்னெடுக்கப்பட்ட சமாதான முயற்சிகளில் பெரும்பாலானவற்றை முதலில் குழப்பியது தென்னிலங்கைத் தரப்புகள் தான். ஆயுதப் போராட்ட காலகட்டத்தில் மட்டும் தான் சமாதான முயற்சிகள் சில தமிழ்த் தரப்பால் குழப்பப்பட்டன என்ற குற்றச்சாட்டுக்கள் உண்டு. ஆனால் அதற்கு முன்னும் பின்னும் சமாதான முயற்சிகளைக் குழப்பியது முழுக்க முழுக்க அரசு தரப்பு தான். கடந்த 2015ல் ஆட்சி மாற்றத்தின் பொழுது தமிழ் மக்கள் மைத்திரிக்கு வாக்களித்தார்கள். ஆனால் மைத்திரி தனக்கு வழங்கப்பட்ட மக்கள் ஆணைக்கு துரோகம் செய்தார். தென்னிலங்கை தரப்புக்களால் ஏமாற்றப்பட்ட ஆகப் பிந்திய அனுபவம் அது.

இந்த அனுபவங்களில் இருந்து கற்றுக் கொண்ட பாடம் என்னவென்றால், யாருக்கு தமிழ் மக்கள் தேவையோ அவர்கள் தமிழ் மக்களை நோக்கி இறங்கி வரட்டும். அவர்கள் தாங்கள் தமிழ் மக்களுக்கு எதைத் தரக்கூடும் என்பதனை முதலில் வெளிப்படையாக மேசையில் வைக்கட்டும். அதன் பின் மூன்றாவது தரப்புக்களின் மேற்பார்வையோடு ஒரு உடன்படிக்கைக்கு தயாரா என்பதை தெரியப்படுத்தட்டும்.

நிச்சயமாக எந்த ஒரு தென்னிலங்கை வேட்பாளரும் அதற்குத் தயாராக இருக்க மாட்டார். மனோ கணேசன் சில மாதங்களுக்கு முன்பு கிளிநொச்சிகள் வைத்துக் கூறியது போல தமிழ் மக்களோடு ஓர் உடன்பாட்டுக்கு வரும் தென்னிலங்கை வேட்பாளர் 100 தமிழ் வாக்குகளைப் பெறலாம். ஆனால் அவர் தெற்கில் ஆயிரம் வாக்குகளை இழக்க வேண்டி வரும் என்பது தான் இப்பொழுதும் இலங்கைத் தீவின் மிகக் குரூரமான அரசியல் யதார்த்தம்.

இலங்கைத் தீவில் இதுவரையிலுமான எந்த ஒரு ஜனாதிபதி வேட்பாளரும் தமிழ் மக்களுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட இன ஒடுக்கு முறைகள் தொடர்பில் பகிரங்கமாக மன்னிப்பு கேட்டதில்லை. குறைந்த பட்சம் கொல்லப்பட்ட தமிழர்களுக்கு வெளிப்படையாக அஞ்சலி செலுத்தியதும் இல்லை. முள்ளிவாய்க்காலில், நினைவிடத்தில் ஒரு பூவைக் கூட வைக்காத அரசியல்வாதிகள்.

சில ஆண்டுகளுக்கு முன் தெற்கில் இடம்பெற்ற தன்னெழுச்சிப் போராட்டங்களை முன்னடத்திய அமைப்புகள் அவ்வாறு அஞ்சலி செலுத்தியிருக்கின்றன. அவர்களில் ஒரு பகுதியினர் இப்பொழுது தேர்தல் கேட்கின்றார்கள். அவர்கள் தமிழ் மக்களின் தோழமைத் தரப்புகள். ஆனால் பெரும்பான்மைக்குள் சிறுபான்மை. அண்மையில் காலமாகிய விக்கிரமபாகு கருணாரத்தினவைப் போல அவர்களும் பெரும்பான்மைக்குள் சிறுபான்மை. அவர்களில் சில தரப்புகள் இப்பொழுது உருவாக்கியிருக்கும் தேர்தல் கூட்டுக்கள் தமிழ் மக்கள் கவனத்தில் எடுக்க வேண்டிய கொள்கை நிலைப்பாடுகளைக் கொண்டிருக்கின்றன. ஆனால் அந்தத் தன்னெழுச்சிப் போராட்டங்களை ஆதரித்த தமிழ் அரசியல்வாதிகள் எவருமே அத்தகைய தரப்புகளோடு இதுவரையிலும் எந்த ஒரு உடன்படிக்கைக்கும் வந்ததாகத் தெரியவில்லை. மாறாக ஒப்பீட்டுளவில் வெற்றி பெறக்கூடிய பிரதான தென்னிலங்கை வேட்பாளர்கள் எப்பொழுது தேர்தல் அறிக்கைகளை வெளியிடுவார்கள் என்று காத்திருப்பதாகவே தோன்றுகின்றது. கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது சம்பந்தரும் இவ்வாறுதான் காலத்தைக் கடத்தினார். ஆனால் ஒரு வித்தியாசம் என்னவென்றால், அந்தக் கட்சி இப்பொழுது இரண்டாக உடைந்து நிற்கிறது. ஒரு பகுதி தேர்தல் அறிக்கைகளுக்காகக் காத்திருக்கின்றது. இன்னொரு பகுதி தமிழ் பொது வேட்பாளரை ஆதரிக்கின்றது. ஆனால் தேர்தல் அறிக்கைகளுக்காக காத்திருக்கும் பகுதி தெளிவாக முன்வந்து பொது வேட்பாளரை எதிர்க்கின்றது. கட்சி என்ன முடிவை எடுத்தாலும் தான் தனது முடிவில் உறுதியாக இருக்கப் போவதாக பகிரங்கமாக அறிவிக்கின்றது. அதாவது கட்சியின் உத்தியோகபூர்வ முடிவை மீறுவோம் என்று பகிரங்கமாக அறிவிக்கின்றது. ஆனால் கட்சியோ முடிவெடுக்க முடியாமல் தத்தளித்துக் கொண்டிருக்கின்றது.

அதாவது உள்ளதில் பெரிய கட்சி முடிவெடுக்க முடியாத ஒரு நிலை.மேலும் தென்னிலங்கை வேட்பாளர்களின் தேர்தல் அறிக்கைகளுக்காகக் காத்திருக்கும் ஒரு நிலை. மற்றொரு கட்சி பரிஸ்கரிக்கின்றது. ஏழு கட்சிகள் இணைந்து பொது வேட்பாளரை முன் வைக்கின்றன. இந்நிலையில் தென்னிலங்கை வேட்பாளர்கள் யாரோடு பேச வருவார்கள்? யார் தங்களை பலசாலிகளாகக் கட்டி எழுப்புகின்றார்களோ, யாரோடு தமிழ் மக்கள் நிற்கின்றார்களோ, யார் தமிழ் மக்கள் மத்தியில் ஒரு வாக்களிப்பு அலையை தோற்றுவிக்கப் போகிறார்களோ, அவர்கள் தான் தென்னிலங்கை வேட்பாளர்களின் தேர்தல் அறிக்கைகளில் மாற்றத்தை ஏற்படுத்தக் கூடியவர்களாக இருப்பார்கள். அதன் பொருள் தமிழ் பொது வேட்பாளர் தென்னிலங்கை வேட்பாளர்களோடு இரண்டாவது விருப்பது தெரிவு வாக்குக் குறித்துப் பேரம் பேசுவார் என்பதல்ல.

## 2வது ஆண்டு நினைவஞ்சலி

## திரு தவசீலன் சுப்பையா



முல்லைத்தீவில் அமைந்துள்ள பாரதி இல்லப் பிள்ளைகளுக்கு கந்தரோடை மக்கள் ஒன்றியம் கனடாக் கிளையினரால் கோப்பாயைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்தவரும் தாயகத்தில் இறைவனடி சேர்ந்தவருமான திரு தவசீலன் சுப்பையா அவர்களது 2வது ஆண்டு நினைவு நாளுக்காக 06 ஆகஸ்ட் 2024 செவ்வாய்க் கிழமை ஈழநாடு பத்திரிகை ஊடாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கப்பட்டது

திரு தவசீலன் சுப்பையா அவர்களை நினைவு கூரும் அன்னாரது குடும்பத்தினர் உறவுகள் மற்றும் கந்தரோடை மக்கள் ஒன்றியம் கனடாக் கிளையினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள். கந்தரோடை மக்கள் ஒன்றியம் கனடாக் கிளையினூடாக இக் குழந்தைகளுக்குஉணவு உடை கற்றல் உபகரணங்கள் போக்குவரத்து வசதிகள் போன்ற அடிப்படை தேவைகளுக்கு உதவ ஆர்வமுடையவர்கள் எம்மை தொடர்பு கொள்ளலாம். தர்மசிறி (647-328-8880) செந்தூர் (647-991-4656) சிவா (647-716-7366) தொடர்பு கொள்ளலாம். கந்தரோடை மக்கள் ஒன்றித்தின் ஆதரவு வெற்றி பெற 3 இல்லங்களில் வாழும் 423 குழந்தைகளின் சார்பிலும் ஈழநாடு பத்திரிகை வாசகர்கள் சார்பிலும் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

# வரலாற்றுப் பதிவும் உலக அணுவாயுதப் போக்கும்

**ஆகஸ்ட் 6ம் திகதி ஹிரோஷிமா மீது அமெரிக்கா அணுவாயுதக் குண்டுத் தாக்குதல் நடத்தி 79 ஆண்டுகள் நிறைவையொட்டிய கட்டுரை இது.**

காலத்தால் அழிக்க முடியாத வடுக்களாக` நிகழ்ந்த ஒரு அவலச் சம்பவம் இற்றைக்கு எழுபத்தொன்பது வருடங்களுக்கு முன்னர் இவ்வுலகில் நடந்தேறியதை நினைவுப்படுத்தும் ஒரு தினம்!

உலகத்திலேயே சூரியன் முதலில் உதிக்கும் தேசம் ஜப்பான் ஆகும். எல்லா நாட்களைப் போன்று அன்றும், அந்த தேசத்திலும் சூரிய ஒளி பிரகாசித்தது. மக்கள் வழமை போல தத்தமது கடமைகளை மகிழ்வுடனும், எதிர்காலம் நோக்கிய திடமான சிந்தனைகளுடனும் ஆரம்பித்தனர். குழந்தைகள் பள்ளிக்குச் செல்ல ஆயத்தமாகினர்.

பெரியவர்கள் தொழிலுக்குச் செல்ல புறப்பட்டுக் கொண்டிருந்தனர். வீட்டில் உள்ள தாய்மார்களோ தமது அன்றாட கருமங்களை செய்துகொண்டிருந்தனர். ஆனால், அந்த நாளே அம்மக்களது வாழ்க்கையை, தலைவிதியை, மாற்றிய மைக்கப் போகும் ஒரு சோகமிக்க நாளாக மாறுமென, அவர்கள் கனவிலும் நினைத்திருக்க மாட்டார்கள். ஆம்!

1945ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 6ஆம் திகதி சுமார் 79 வருடங்களுக்கு முன்பாக போயிங் பி- 29 என்ற அமெரிக்காவின் `எனோலாகே` விமானமானது விமானியும் படைத்தளபதியுமான `பால்டிப்பெட்ஸ்` என்பவரால் `டினியன்` விமான தளத்திலிருந்து அதிகாலையில் `லிட்டில் போய்'' என்று பெயரிடப்பட்ட அணு குண்டைத் தாங்கி ஹிரோஷிமா நகரத்தை நோக்கி புறப்பட்டது. (இத்தளபதியின் தாயார் பெயர் தான் `எனோலாகே` என்பதாகும்).

சரியாக ஜப்பான் நேரப்படி காலை 8:16 மணிக்கு உலகின் முதல் அணு குண்டை அமெரிக்கா ஹிரோஷிமாவில் வீசியது. 64 கிலோ எடையுள்ள `யுரேனியம் 235` குண்டு தரையில் விழுந்த 45 வினாடிக்குள் சுமார் 5 மைல் சுற்றளவுக்கு ஹிரோஷிமா நகரின் 60 சதவீத பகுதிகளை கண் மூடித் திறப்பதற்குள் தரை மட்டமாக்கியது.

ஹிரோஷிமா 905.1 கிலோ மீற்றர் பரப்பைத் தன்னகத்தே கொண்ட மாகாண மாகும். இப்பிரதேசத்தில் அணுகுண்டு விழுந்ததும் அது பாரிய சப்தத்துடன் வெடித்தது. சுமார் 2000 அடிகளுக்கு மேல் தீச்சுவாலை மேலெழுந்தது. பதினாறு கிலோ மீற்றருக்குட்பட்ட சகல கட்டடங்களும் தரைமட்டங்களாகின. பல்லாயிரக்கணக்கான மக்கள் மாண்டனர். பெருமளவானவோர் காயமடைந்தனர். அங்கவீனமானவர்கள் பலர். ஏராளமான சொத்துக்கள் நிர்மூலமாகின. இயற்கை வளங்கள் அழிந்தன. பல்வேறுபட்ட உயிரினங்கள் கருகி மாண்டன.

கண்மூடி திறப்பதற்குள் மனித குலமே வெட்கி நாணும் அளவுக்கு பாரிய அளவிலான உயிர்கள் அணு ஆயுதத்திற்கு இரையாகின. இந்த அணு ஆயுதத்தின் கதிர்வீச்சு தாக்கங்கள், இன்றும் அந் நகரில் பிறக்கும் சில குழந்தைகள் வளர்ச்சி குறைபாட்டுத் தன்மையுடனும், புற்றுநோய் போன்ற இன்னோரன்ன நோய்களாலும், பாதிக்கப்பட்டு வருகின்றனர் என்றும் சொல்லப்படுகின்றது.

உலகே இன்று வரை பார்த்திராத ஒரு மிகப் பெரிய அழிவாக இது கருதப்படுகின்றது. இவ்வாறான கொடூரத் தன்மையினைக் கண்ணுற்றவர்கள் `ஹிரோஷிமா தினத்தை` நினைவு கூறவும், அதன் அபத்தை உலகுக்கு உணர்த்தவும், சமாதானத்தை வலியுறுத்தவும், ஒவ்வொரு ஆண்டும் உலகத்தில் வாழ்கின்ற மக்களால் ஹிரோஷிமா நினைவு தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது எனலாம். இன்றைய தினம் ஜப்பான் தேசத்தில் பொது விடுமுறை தினமாகப் பிரகடனப்படுத்தப் பட்டுள்ளது.



இத்தினத்தின் நோக்கம் போருக்கு எதிராக, உலக ரீதியில் சமாதானம் நோக்கிய அரசியலை கொண்டு செல்ல வேண்டுமென்பதே ஆகும்.

இதன் ஓர் அங்கமாக தான் 1945ஆம் ஆண்டு உலகத்தில் சமாதானத்தை ஏற்படுத்தும் முகமாக ஐக்கிய நாடுகள் சபை உருவானது. இன்று பல்வேறு நாடுகள் தமது பாதுகாப்புக் கருதி, அணு ஆயுதங்களை உற்பத்தி செய்வதாகக் கூறுகின்றன.

அணுகுண்டு வீசப்பட்டு சுமார் நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு, 1949ஆம் ஆண்டில் அன்றைய சோவியத் யூனியனானது தனது முதலாவது அணு குண்டு பரிசோதனையை மேற்கொண்டது. அதனைத் தொடர்ந்து 1952ஆம் ஆண்டு ஐக்கிய ராஜ்யமும், 1960ஆம் ஆண்டு பிரான்சும், 1964ஆம் ஆண்டு சீனாவும் , அணுகுண்டு பரிசோதனையை மேற்கொண்டன.

1986ஆம் ஆண்டு அன்றைய சோவியத் யூனியனில் ஒரு பகுதியாக காணப்பட்ட செர்னோபில் நகரம் ( இன்றைய யுக்ரேன் நகரில் உள்ளது) அணு உலை வெடித்ததில் நூற்றுக்கு குறைவானவர்களே உயிர் இழந்ததாகக் கணக்கிடப்பட்டிருந்தாலும், அதிலிருந்து வெளிவந்த கதிரியக்கம் பரவிய பிரதேசங்களில் வாழ்ந்து வந்த மக்களில் பலரும் புற்றுநோய் உபாதைக்கு உள்ளாகி உள்ளார்களென அறிய முடிகின்றது.

எமது பிராந்தியத்தில் இந்தியாவும், பாகிஸ்தானும் இன்றும் அணுவாயுதப் பரிசோதனைகளைத் தொடர்ச்சியாக மேற் கொண்டு வருகின்றன. இது இந்த பிராந்தியத்தின் சமாதானத்திற்கு ஒரு அச்சுறுத்தலாகவே கருதப்பட்டு வருகின்றது.

தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற யுக்ரேன் - ரஷ்யா யுத்தத்தில் கூட ரஷ்யா அணுகுண்டைப் பாவிக்கக் கூடுமென சில நாடுகள் எதிர்வு கூறியுள்ளன.

சீனாவின் கடும் எதிர்ப்பையும் மீறி அமெரிக்க சபாநாயகர் நான்சி பெலோசி 2023ஆம் ஆண்டு தைவானுக்கு சென்றதையடுத்து சீனா - தைவானுக்கு இடையே போர் பதற்றம் ஏற்பட்டிருந்தனை அன்றைய செய்திகள் வெளிப்படுத்தி இருந்தன.

இராஜதந்திர ரீதியாக உலகில் உள்ள பல்வேறு நாடுகளுடன் தொடர்புகள் அற்ற நிலையில் இருக்கின்ற வட கொரியாவானது, இன்றும் மிக அபாயகரமான அணு ஆயுதங்களைத் தயாரித்து வருவதனை நாம் ஊடகங்கள் மூலமாக அன்றாடம் அறிய முடிகின்றது. ரஷ்ய நாட்டு அதிபரின் அண்மைய வட கொரியா விஜயமானது இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை வலுப்படுத்தி இருப்பதாகக் காணப்பட்டாலும், இந்த விஜயமானது சர்வதேச ரீதியில் பல சந்தேகங்களை கிளப்பியிருப்பதாகவே அரசியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

சுவீடனில் அமைந்துள்ள `ஸ்டொக்ஹோம் சர்வதேச அமைதி ஆராய்ச்சி நிறுவனத்தின்` அண்மையில் வெளியிடப்பட்ட அறிக்கையில், உலக நாடுகளின் அணு ஆயுத உற்பத்தி தொடர்பான தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின்படி, உலக அளவில் தற்போது பயன்படுத்தக்கூடிய நிலையில் உள்ள அணு ஆயுதங்களின் எண்ணிக்கை சுமார் 10,000 எனவும், இதில் சீனா வசம் மாத்திரம் சுமார் 500 அணு ஆயுதங்கள் இருப்பதாகவும், பாகிஸ்தானை விட இந்தியாவிடம் அணு ஆயுதங்கள் அதிகம் உள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

அமெரிக்கா, ரஷ்யா, பிரிட்டன் , பிரான்ஸ், சீனா, இந்தியா , பாகிஸ்தான், வடகொரியா, இஸ்ரேல் ஆகிய ஒன்பது நாடுகள் அணு ஆயுத சக்தியினை தம் வசம் கொண்டுள்ளன.

இந்தியாவின் கைவசம் உள்ள அணு ஆயுதங்களின் எண்ணிக்கை சுமார் 172ஆக இருக்கும் அதே வேளை பாகிஸ்தான் வசம் 170 அணு ஆயுதங்கள் இருப்பதாகவும் ஸ்டொக்ஹோம் சர்வதேச அமைதி ஆராய்ச்சி நிறுவனம் மேலும் கணிப்பிட்டுள்ளது. 2023ஆம் ஆண்டு இந்தியா தனது அணு ஆயுதங்களை விரிவு செய்ததாகவும், இதற்கு நவீன முறையை பின்பற்றியதாகவும், தெரிவித்துள்ளது. நீண்ட தூரத்தில் உள்ள இலக்கை எட்டும் வகையில் அணு ஆயுதம் சார்ந்த மேம்பாடுகளை இந்தியா மேற் கொண்டுள்ளது என தகவல்கள் வெளியாகின்றன. உலகின் ஒட்டுமொத்த அணு ஆயுதங்களின் கையிருப்பில் சுமார் 90 சதவீதமானவையை அமெரிக்கா, ரஷ்யா ஆகிய இரு நாடுகளும் கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த ஓராண்டில் உலக நாடுகளின் அணு ஆயுதங்களின் எண்ணிக்கை சுமார் 13 சதவீதத்தால் அதிகரித்துள்ளது கடந்த வருடம் மட்டும் உலக நாடுகள் சுமார் 91 .3 பில்லியன் டாலர்களை செலவிட்டுள்ளன. இதில் இந்தியாவின் பங்களிப்பானது 2.7 பில்லியன் டாலர்களாக காணப்படுகின்றது. அமெரிக்கா 51.5 பில்லியன் டொலர்களையும், சீனா 11.9 பில்லியன் அமெரிக்க டொலர்களையும் அணு ஆயுதத்திற்காக செலவிட்டுள்ளன.

உலக அளவில் தற்போது பயன்படுத்தக் கூடிய நிலையிலுள்ள அணு ஆயுதங்களின் எண்ணிக்கை சுமார் 9585 ஆகும். இதில் சீனாவசம் மாத்திரம் 500 ஆயுதங்களாக இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. ஜனவரி மாதம் 2024ஆம் ஆண்டில் உலகம் முழுவதும் 12.221 போர்க்கப்பல்கள் இருந்ததாகவும், அவற்றில் 9.585 அணு ஆயுதங்கள் சாத்திய

**கட்டுரையாளர்**
**தமிழகத்தில் இருந்து**
**கேணல் ஹரிகரன்**



மான பயன்பாட்டுக்காக கையிருப்பில் வைக்கப்பட்டிருந்ததாகவும் இந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கிடையில் கடந்த மாதம் இந்தியாவிலுள்ள மகாராஷ்டிரா மாநிலத்திலுள்ள நாக்பூரை சேர்ந்த `எகானமிக் எக்ஸ்ப்ளோசிவ்ஸ் லிமிடெட்` பல ஆண்டுகள் ஆராய்ச்சி செய்து செபெக்ஸ் 2 என்ற புதிய வெடிகுண்டை தயாரித்து உள்ளது. உலகின் மிக சக்திவாய்ந்த வெடிகுண்டுகளில் ஒன்றாக இருக்கும் செபெக்ஸ் 2 குண்டானது டிஎன்டி வெடிகுண்டை விட 2.01 மடங்கு அதிக பாதிப்புகளை ஏற்படுத்துமெனக் கருதப்படுகின்றது.

இந்த வகை வெடிகுண்டுகளை பிரம்மோஸ் ஏவுகணை உட்பட இந்தியாவின் அனைத்து வகை ஏவுகணைகளிலும் பயன்படுத்த முடியுமெனவும், பீரங்கி, போர் விமானம், போர்க்கப்பல், நீர்மூழ்கியில் இருந்தும் தாக்குதல் நடத்த முடியுமெனவும் கூறப்படுகின்றது.

இன்று உலக நாடுகளின் இராணுவக் கட்டமைப்புக்களில் டிஎன்டி, ஆர்டிஎக்ஸ், டைனமைட் உள்ளிட்ட வகைகளை சேர்ந்த வெடிகுண்டுகள் பயன்படுத்தப்படுகின்றன.

ரஷ்யா - யுக்கிரேன் யுத்தம், இஸ்ரேல்- ஈரான் மற்றும் மத்திய கிழக்கு நாடுகளுக்கு இடையில் காணப்படுகின்ற பதற்ற நிலை, சீனா - தாய்வான் பதற்ற நிலை, இந்தியா- சீனா எல்லைத் தகராறு, இந்தியா - பாகிஸ்தான் முரண்பாடுகள் போன்ற இன்னொரு அந்த காரணிகளின் காரணமாக இன்னுமொரு யுத்தம் ஏற்படக்கூடிய சாத்தியக் கூறுகள் தென்படுவதாக பெருமளவானோர் எதிர்வு கூறுகின்றனர்

இவ்வாறான நிகழ்வுகள் இன்றைய காலகட்டத்தில் ஆரோக்கியமான விடயங்களாக கருதப்பட முடியாததாக உள்ளது. அணுகுண்டுகளினை ஆபத்தான ரீதியில் பயன்படுத்த வாய்ப்புகள் இருப்பதனால், இதனை உற்பத்தி செய்யும் நாடுகள், இவைகளின் உற்பத்தி பற்றி மறுபரிசீலனை செய்ய வேண்டியது இன்று மிகவும் அவசியமாகின்றது. இருக்கின்ற அணுவாயுதங்கள் பாதுகாக்கப்பட வேண்டும்.

இன்று உலகளாவிய ரீதியில் பயங்கரவாதம் தலைவிரித்து ஆடுகின்றதனால், இவ்வாறன ஆயுதங்கள் பயங்கரவாதிகளிடம் சிக்காது பாதுகாக்கப்பட வேண்டும். அதனால், அனைத்து நாடுகளும் அணு ஆயுத உற்பத்திக்கு ஒரு முற்றுப்புள்ளி வைப்பது அவசியமாகும்.

உலகில் அமைதி நிலவ, அணு ஆயுதங்களை ஒழிக்க வேண்டும். ஐக்கிய நாடுகள் சபையினது எதிர்பார்ப்பானது ஓர் அணு ஆயுதமற்ற உலகம், சாந்தி, சமாதானம் என்பன மக்களிடம் இருந்து தான் ஆரம்பமாக வேண்டும் என்பதாகும். ஒவ்வொரு நாட்டிலும் இருக்கின்ற மக்கள் இதனது ஆபத்து தன்மையினை உணர்ந்து அதற்கு எதிராக குரல் எழுப்ப வேண்டியது மிகவும் அவசியமானதாகக் கருதப்படுகின்றது. அணுவாயுதங்களைத் தயாரிக்கின்ற (22ம் பக்கம் பார்க்க)

# தமிழரசுக்கட்சி என்ன செய்யப் போகின்றது?

ஜனாதிபதி தேர்தலில் ஒரு தமிழ் பொது வேட்பாளரை நிறுத்துவதற்கான முயற்சி அதன் இறுதி கட்டத்தை எட்டியிருக்கின்றது. தமிழ் மக்கள் பொதுச் சபையும் தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை ஏற்றுக்கொள்ளும் கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்பட்டு வருகின்றன. ஆனால் இலங்கை தமிழரசு கட்சி அதன் இறுதி முடிவை இதுவரையில் அறிவிக்கவில்லை.

அவ்வாறானதொரு முடிவை தமிழரசு கட்சியால் அறிவிக்க முடியுமா என்னும் கேள்வியுடன் நாட்கள் நகர்கின்றன. பொதுவான அவதானத்தில், தமிழரசு கட்சியால் அவ்வாறானதொரு உறுதியான முடிவை அறிவிக்க முடியுமா என்பது கேள்விக்குறியாகும். ஏனெனில் அந்தளவிற்கு கட்சி உள்முரண்பாடுகளுக்குள் சிக்கியிருக்கின்றது.

தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாடு தொடர்பான உரையாடல்கள் வெளிவந்ததை தொடர்ந்து, எம்.ஏ.சுமந்திரன் தனது எதிர்ப்பை வெளியிட்டிருந்தார். தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை தர்க்கரீதியில் எதிர் கொள்ளுவதை விடவும், மக்கள் மத்தியில் குழப்பங்களை ஏற்படுத்தும் நோக்கிலேயே அவரது பார்வை அமைந்திருந்தது.

தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாடு தர்க்க ரீதியில் பலமானது என்பதை, சுமந்திரன், ஏனைய அரசியல்வாதிகளை விடவும் ஆழமாக புரிந்து கொள்ளக் கூடிய ஒருவர் ஆனால் இவ்வாறானதொரு முயற்சியை ஆதரிக்கும் அரசியல் பின்புலம் அவரிடம் இல்லை. அவரைப் பொறுத்த வரையில் ஒரு தென்னிலங்கை வேட்பாளரை ஆதரிப்பதன் மூலம் இதனை சாதாரணமாக கடந்து செல்ல வேண்டும் என்னும் நிலைப்பாடுடையவர்.

தனது நிலைப்பாட்டுக்கு எவ்வாறான வாதங்களை முன் வைத்தாலும் கூட, அடிப்படையில் அவரது தெரிவு ஒரு தென்னிலங்கை வேட்பாளர்தான். இந்த நிலைப்பாட்டில் உறுதியாக இருக்கும் ஒருவரால் எவ்வாறு தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை ஆதரிக்க முடியும்?

தமிழரசு கட்சி இதுவரையில் அதன் உத்தியோகபூர்வ முடிவை அறிவிக்கவில்லை. ஆனாலும் சுமந்திரன் பொது வெளிகளில் தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை எதிர்த்து பிரச்சாரங்களை முன்னெடுத்து வருகின்றார். இதனை தோற்கடிப்பேன் என்று பகிரங்கமாக கூறுகின்றார். தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை தோற்கடிப்பேன் என்று ஆவேசப்படுமளவிற்கு, தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டால் தமிழினத்திற்கு அப்படியென்ன தீங்கு நேர்ந்துவிடும்? தமிழ் பொது வேட்பாளரை தோற்கடித்து, ஒரு தென்னிலங்கை வேட்பாளரை வெற்றி பெறச் செய்வதன் ஊடாக சுமந்திரன் சாதிக்கப் போவது என்ன?

சுமந்திரனும் அவரது கட்சி விசுவாசிகள் சிலரும், தமிழ் பொது வேட்பாளரை கடுமையாக எதிர்த்து வரும் நிலையில், தமிழரசு கட்சியின் சிறிதரன் அணியினர் ஆதரித்து வருகின்றனர். இந்த விடயத்தில், தமிழரசு கட்சியின் வலுவான ஆதரவுக் குரலாக சிறிதரன் இருக்கின்றார். ஆனால் சிறிதரனால் கட்சிக்குள் தனது கருத்தை வலுவாக நிலை நிறுத்த முடியவில்லை. தமிழரசு கட்சியின் மத்திய குழுவில் இருப்பவர்களில் அனேகர் கூட்டங்களில் பங்கு கொள்வதில்லை.

இந்த நிலையில் தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை வாக்கெடுப்பிற்கு விட்டுக் கூடிய நிலையில் கட்சியில்லை. ஆனால் ஒரு நிலைப்பாடு சரியானது என்றால், அந்த நிலைப்பாட்டை ஆதரிப்பதற்காக அனைவரையும் ஒன்று கூட்டுவதில் சிரமங்கள் இருக்கப் போவதில்லை.

இந்தப் பின்புலத்தில் நோக்கினால் தமிழ் பொது வேட் பாளர் நிலைப்பாட்டை சுமந்திரன் மட்டும் எதிக்கவில்லை, தமிழரசு கட்சிக்குள் பெரும்பாண்மையினர் எதிர்கின்றனர் என்னும் முடிவுக்கே வர வேண்டியிருக்கின்றது.



இதுதான் நிலைமை என்றால் இலங்கை தமிழரசு கட்சி அதன் முடிவை மாற்றிக் கொள்ளாதா? ஒப்பீட்டடிப்படையில் தமிழரசு கட்சி தமிழ் தேசிய அரசியலை பிரதிநித்துவப்படுத்தும் பிரதான கட்சி. அவ்வாறானதொரு கட்சி தமிழ் தேசிய நிலைப்பாடு ஒன்றை தோற்கடிப்பதற்காக செயற்பட்டால், அதன் பின்னர் தமிழரசு கட்சி தமிழ் தேசியத்தை பிரதிநிதித்துவம் செய்வதாக கூறிக் கொள்ள முடியுமா? இந்தக் கேள்விகளுக்கான பதிலை தேடுவதில் தமிழரசு கட்சியினர் இனி தாமதிக்கக்கூடாது. தாமதிக்கும் ஒவ்வொரு கணமும் தமிழரசு கட்சி தமிழ் தேசிய அரசியலிலிருந்து விலகிச் செல்வதாகவே நோக்கப்படும்.

முள்ளிவாய்க்காலுக்கு பின்னரான கடந்த பதினைந்து வருட காலத்தில், தமிழர் அரசியலை தீர்மானிப்பதில், தமிழரசு கட்சியே பிரதான பங்குவகித்திருந்தது. ஆனால் தமிழரசு கட்சியின் அனைத்து நகர்வுகளுமே தோல்வியில் தான் முடிந்திருக்கின்றது.

இன்று, தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாடு ஒன்றை நோக்கி சிவில் சமூக அமைப்புக்கள், புத்திஜீவிகள் என பலரும் ஒன்றிணைந்து செயற்படுதற்கான பின்னணியை இந்த அடிப்படையில் தான் புரிந்து கொள்ள வேண்டும். சம்பந்தன் தலைமையிலான தமிழரசு கட்சி சரியான தீர்மானங்களை எடுத்திருந்தால், தமிழ் மக்களின் அரசியல் நிலைப்பாட்டின் அடிப்படையில் தமிழ் மக்களை ஒன்றிணைக்க வேண்டியதொரு தேவை ஏற்பட்டிருக்காது.

இந்த அடிப்படையில் சிந்தித்தால், தமிழரசு கட்சி அதன் தவறுகளை சரி செய்து கொள்ள வேண்டிய பொறுப்பை உணர வேண்டும். அப்படி உணர்ந்தால், தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை ஆதரிப்பதை தவிர வேறு தெரிவுகள் எதுவும் தமிழரசு கட்சிக்கு முன்னால் இல்லை. முள்ளிவாய்க்காலுக்கு பின்னரான ஜனாதிபதி தேர்தல்களின் போதும், தென்னிலங்கை வேட்பாளரை ஆதரிக்கும் முடிவை தமிழரசு கட்சியே தீர்மானித்திருந்தது. அப்போது, கூட்டமைப்பின் அங்கமாக இருந்த கட்சிகளுக்கும் இந்த விடயத்தில் பொறுப்பு இருக்கின்றது என்றாலும் கூட, அவர்கள் தங்களின் தவறை உணர்ந்திருப்பதன் விளைவாகவே, தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை ஆதரிக்க முன்வந்திருக்கின்றனர்.

இவற்றை எல்லாம் ஒரு புறமாக வைத்து விட்டும் சிந்திக்கலாம் தான். அதாவது, ஒரு தென்னிலங்கை வேட்பாளரை ஆதரிக்குமாறு கூறுவதற்கு தமிழரசு கட்சியிடமுள்ள நியாயம் என்ன? அதனை பொது அரசியலில் தீர்மானம் எடுக்க வேண்டிய இடத்தில் இருப்பவர்கள் (கட்சி மற்றும் தலைவர்கள்), தீர்மானம் எடுக்க வேண்டிய தருணத்தில், தீர்மானங்களை எடுத்தேயாக வேண்டும். அதில் தவறிழைத்தால் அல்லது பின்னடித்தால், அது ஒரு இனத்தைதே பாதிக்கும். தமிழ் தேசிய அரசியல் பயணத்தில் இதற்கு பல உதாரணங்கள் உண்டு. கடந்த பதினைந்து வருடங்களில் சம்பந்தன் - சுமந்திரன் அணியின் தீர்மானங்களால், தமிழரசு கட்சி தொடர் பின்னடைவுகளையே சந்தித்திருக்கின்றது. 2010இல் பிரதான கட்சியாக இருந்த நிலைமை மாறி, கழுதை தேய்ந்து கட்டெறும்பான நிலைக்கு கீழிறங்கியிருக்கின்றது. இதனை சரி செய்து கொண்டு, கட்சியின் தனித்துவத்தையும் மாண்பையும் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு தமிழரசு கட்சியின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் உண்டு. காலத்திற்கு ஏற்ற அரசியல் தீர்மானங்களை எடுக்கத் தவறும் ஒரு கட்சி, காலத்தால் அடித்துச் செல்லப்படுவதை எவராலும் தடுக்க முடியாது.

தமிழரசு கட்சி அவ்வாறாதொரு நிலையில் விளிம்பில் இருக்கின்றது. இதனை உணரத் தவறினால், கட்சி நிர்மூலமாகுவதை எவராலும் தடுக்க முடியாது. தமிழ் பொது வேட்பாளரை ஆததிப்பது, தமிழரசு கட்சியை பல்வேறு வழிகளிலும் தூக்கி நிறுத்தும். இப்போது தமிழரசு கட்சியினருக்கு முன்னால் ஒரேயொரு கேள்வி தான் உண்டு. அதாவது, சுமந்திரன் என்னும் தனிநபரிடம் தோற்றுப் போய், கட்சியை சிதைப்பதா அல்லது, கட்சியை காப்பாற்றுவதற்காக சில தனிநபர்களை தோற்கடிப்பதா? வெளியில் முன் வைக்கும் ஆற்றலுடன் கட்சி இருக்கின்றதா? சுமந்திரனின் எதிர்ப்பு வாதங்கள் மிகவும் பலவீனமானவை. அனேகமானவை அவரது தடுமாற்றங்களினதும் தோல்வியினதும் விளைவுகளாகும். தமிழ் பொது வேட்பாளர் எதிர்பார்க்கும் வாக்குகளை பெறாது விட்டால், தமிழ் மக்கள் பேரம் பேசும் பலத்தை இழந்து விடுவார்கள் என்பதில் எவ்வித தர்க்கமும் இல்லை.

அப்படியாயின் கடந்த மூன்று தேர்தல்களிலும் தமிழ் பொது வேட்பாளர் நிறுத்தப்படவில்லை, இந்த மூன்று தேர்தல்களின் போதும் தமிழ் மக்கள் தென்னிலங்கை வேட்பாளர்களுக்கே அளித்திருந்தனர். இந்தக் காலத்தில் சுமந்திரன் எவ்வாறான பேரம் பேசல்களில் ஈடுபட்டார்? அந்தப் பேரம் பேசல்களால் தமிழ் மக்களுக்கு என்ன கிடைத்தது?

கட்டுரையாளர்:-
திருகோணமலை இருந்து
- யசீந்திரா -





# 1983 யூலை இனக்கலவரத்திற்கான மன்னிப்பும் சிங்கள அரசியலும்!

இலங்கை இனவாத அரசியலின் வரலாற்றில் 1983 ஆண்டு யூலை இனக்கலவரம் நிறைவு பெற்று 41 வருடங்களை கடந்துள்ளது. தமிழர் நிலம் எங்கும் அத்தகைய வரலாற்றுக் கொடுமையை நினைவு கொள்ளும் நிகழ்வுகள் நடைபெற்று வருகிறது.




அத்தகை நிகழ்வுகளால் தமிழ் மக்கள் மத்தியில் வரலாற்றை கடத்துவதுடன் துயரங்களை நினைவு கொள்வதாகவே நகர்கிறது. ஆனால் இத்தகைய படுகொலைக்களுக்கும் வன்முறைகளுக்கும் எத்தகைய பதிலீடும் வழங்கப்படவில்லை என்பது தெரிந்த விடயமே. தற்போதைய அரசாங்கத்தின் நீதி அமைச்சர் என்றவகையிலும் தனிப்பட்ட ரீதியிலும் விஜயதாச ராஜபக்ஷ தமிழ் மக்களிடம் மன்னிப்புக் கோருவதாக (23.07.2024) பராளுமன்றத்தில் தெரிவித்தார். ஆனால் கொவிட்-19 தொற்றின் போது இஸ்லாமிய மக்களது ஜனாசாக்களை அடக்கம் செய்யாது தகனம் செய்ததற்காக அரசாங்கம் மன்னிப்புக் கோரியது. இலங்கையின் வரலாற்றில் முக்கிய சம்பவமாகவே தெரிகிறது.

இக்கட்டுரையும் ஜீலைக்கலவரம் தமிழ் மக்களது அரசியலில் ஏற்படுத்தியுள்ள துயரத்தையும் அதன் சமகால நிலையையும் தேடுவதாக உள்ளது. 1983 ஆண்டு ஜீலை 23 திகதி விடுதலைப் புலிகள் திருநெல்வேலியில் இராணுவ வாகனம் மீது மேற்கொண்டு தாக்குதலில் 13 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இதற்கு பதிலாக அன்றைய அரசாங்கமும் இராணுவமும் இணைந்து நாடெங்கும் பரவலாக வாழ்ந்த தமிழ் மக்கள் மீது இனவன்முறையை மேற்கொண்டனர்.

இத்தகைய இனவெறித் தாக்குதலில் தமிழர்கள் வெட்டியும், அடித்தும், சுட்டும் கொல்லப்பட்டனர். தமிழர்களது சொத்துக்கள் முழுமையாக சூறையாடப்பட்டது. பாடசாலை மாணவிகள் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டனர். நாடெங்கும் ஏழு நாட்களாக நீடித்த இன வெறித்தாக்குதலில் 3000 மேற்பட்ட தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர். ஒரு இலட்சத்து ஐம்பதாயிரத்திற்கு மேற்பட்டவர்கள் வீடற்றவர்களாக்கப்பட்டு அகதிகளாக்கப்பட்டனர். தென் இலங்கையில் நீண்டகாலமாக வாழ்ந்த தமிழர்கள் வடக்குக்கு கப்பல்களில் ஏற்றப்பட்டு அனுப்பப்பட்டனர்.

இத்தகைய இன வன்முறைக்கப் பின்னால் அரசும் அதன் அரச இயந்திரங்களும் முழுமையாகப் பயன்படுத்தப் பட்டது. திட்டமிட்டு வெலிக்கடைச் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருந்த குட்டிமணி, தங்கத்துரை போன்ற ஈழவிடுதலைப் போராட்டத்தில் பங்கெடுத்த தலைவர்கள் அடித்தும் துன்புறுத்தியும் கொல்லப்பட்டனர். குறிப்பாக குட்டிமணியின் கண்கள் தோட்டி எடுக்கப்பட்டு கொல்லப்பட்டதாக ஆசிய மனித உரிமைகள் வெளியீடுகளில் பதிவு செய்யப்பட்டுள்ளது. காரணம் குட்டிமணியை நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தப் பட்ட போது தனது கண்களை இன்னோர் தமிழனுக்கு தானமாக வழங்கப் போவதாகவும் தமிழருக்கு தனிநாடு ஒன்று கிடைக்கும் போது தனது கண்களால் மலரும் தேசத்தை காணப் போவதாகவும் தெரிவித்திருந்தார். இதற்கு பழிவாங்கும் முகமாகவே குட்டிமணியின் கண்கள் தோண்டப்பட்டு அவர் கொல்லப்பட்டதாக ஆசிய மனித உரிமைகளது பதிவுகள் வெளிப்படுத்துகின்றன. இத்தாக்குதலுக்காகவும் நாடெங்கும் தாக்குதல் மேற்கொள்வதற்காகவும் சிறைக்கைதிகள் விடுவிக்கப்பட்டதுடன் அவர்களுக்கு இராணுவம் ஒத்துழைப்பும் அரசாங்கம் அனுசரணையும் வழங்கியது என்பது அப்போதைய தகவல்கள் உறுதிப்படுத்தியிருந்தன. அதனால் இத்தாக்குதலை அரசாங்கம் திட்டமிட்டே மேற்கொண்டது என்பதை தமிழர்கள் கருதுகின்ற நிலை தவிர்க்க முடியாது.

ஜீலைக் கலவரம் தொடர்பில் தென்



இலங்கையைச் சேர்ந்த பாளி மொழிப் புலமையாளரும் இலங்கையின் முன்னாள் தொல்பொருள்துறைத் தலைவருமான கலாநிதி ஈ.டபிள்யூ . அதிகாரம் குறிப்பிடும். போது இத்தகைய பெரும் துயரம் இனி மேல் மீண்டும் மீண்டும் நடைபெறாது இருக்க வேண்டுமென்றால் ஒரு பிரதியைக் கூட மிஞ்சம் விடாமல் அனைத்து மகாவம்சப் பிரதிகளையும் தீயிட்டுக் கொழுத்த வேண்டும் என்றார். காரணம் அந்தளவுக்கு மகாவம்சம் ஊட்டும் இனத்துவேச வரலாறு ஆபத்தானது என்பதே இதன் அர்த்தமாகும். இலங்கைத்தீவின் வரலாறு முழுவதும் ஆதிக்கம் செலுத்தும் ஒன்றாக இனவாதம் காணப்படுகிறது.

அரசின் நீதித்துறையின் பராபட்சமும் இனவாதத்தை கட்டுப்படுத்த முடியாத நிலையே தமிழ் மக்களின் நீண்ட துயரத்திற்கு அடிப்படையானது. தென் இலங்கையின் அரசியலில் சட்டம், நீதி, நிர்வாகம் என்பன முழுமையாக இனவாதத்திற்குள் அகப்பட்டுள்ளதுடன் அதிலிருந்து மீண்டு வருவதென்பது கடினமானதாகவே கடந்த காலவரலாறு முழுவதும் கண்டு கொள்ளக் கூடியதாக அமைந்துள்ளது. தற்போது கூட இஸ்லாமிய சகோதரர்களது ஜனாசாவுக்காக மன்னிப்புக் கோரிய போதும் தமிழ் மக்களது நீண்ட இனப்படுகொலைக்கும் அழிப்புகளுக்கும் பொறுப்பேற்று அரசே அத்தகைய மன்னிப்பைக் கோரவில்லை. மாறாக ஓரமைச்சர் மன்னிப்புக் கோருவதென்பது அதுவும் தனிப்பட்ட ரீதியிலானது என்பதும் வினோதமான விடயமாகவே உள்ளது.

இஸ்லாமிய சகோதரர்களுக்கு இழைக்கப்பட்டது அநீதியானதாக உள்ளது என்பது யதார்த்தமான போதும் தமிழருக்கு இழைத்த அநீதியானது வரலாறு முழுவதும் மறக்க முடியாததென்றாகும். அதனை தென் இலங்கையாக அதற்கு காரணமான தரப்புக்கள் அனைத்தும் அத்தகைய மன்னிப்பை கோருவது அவசியமானது.

இரண்டாம் உலக போரின் இறுதியில் அமெரிக்கர்கள் ஜப்பான் மீது இரு அணுக்குண்டுகளை வீசிய பல இலட்சம் ஜப்பானியர்களை கொன்று குவித்தனர். அத்தகைய தாக்குதலுக்கு வருத்தம் தெரிவித்து அமெரிக்க ஜனாதிபதியாக ஒபாமா ஆட்சியில் இருந்த போது மன்னிப்புக் கோரிய தோடு ஹிரோசிமா, நாகஷாகியில் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்திய நிகழ்வை உலகம் கண்டு வியந்தது. அத்தகைய திராணியும் துணிச்சலும் கொண்ட தென் இலங்கைத் தலைவர்கள் எவரையும் காண முடியாதுள்ளது. காலம் தாழ்தியாவது அமெரிக்கர்கள் வெளிப்படுத்திய மரியாதையை தமிழர் மீது தென் இலங்கைத் தலைவர்களோ அரசோ காட்டாதது வேதனை அளிக்கும் விடயமாகவே உள்ளது.

அமெரிக்கர்கள் நலன்கருதி அத்தகைய நகர்வை மேற் கொண்டாலும் அதில் ஒரு தலைமுறையின் மாறுதல் தென்படுகிறது. அதற்குக் கூட தென் இலங்கை புதிய தலைமுறை தயாராக இல்லை என்பது கவனத்திற்குரியது.

நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ ஏன் தமிழர் மீதான தனிப்பட்ட மன்னிப்பை ஜீலைக் கலவரம் பொறுத்து முன் வைத்தார் என்பது எல்லோரிடமும் உள்ள கேள்வியாகும். முதலாவது, உண்மையிலேயே இஸ்லாமிய சகோதரர்களிடமே அரசாங்கம் மன்னிப்புக் கோரியிருந்தது. அதற்கான அடிப்படை இஸ்லாமிய சகோதரர்களது வாக்குகள் அடுத்துவரும் ஜனாதிபதி தேர்தலின் வெற்றியை நிர்ணயிக்க அவசியமானதாகவே உள்ளது.


தென் இலங்கையில் நான்கு முனைத் தேர்தல் போட்டி தயாராகி விட்டது. வெற்றியை அடையும் ஒரு வேட்பாளர் 50 சதவீதத்திற்கு மேல் எட்டுவதென்பது மிகக் கடினமானதே. குறைந்தது சதாரண பெரும்பான்மை என்ற வெற்றி இலக்கை அடைவதற்கு இஸ்லாமிய, தமிழ் வாக்குகள் தேவையானதாகவே உள்ளது. ஜனாதிபதியை தீர்மானிக்கும் வாக்குகளாக ஏனைய சிறுபான்மைத் தேசியங்களது வாக்குகளே அமையப் போகின்றன. அதனால் அத்தகைய சாதகமான நிலையில் இஸ்லாமிய சகோதரர்களே உள்ளனர். காரணம் சனத் தொகையில் 65 சதவீதமானவர்கள் வடக்குக்கு கிழக்குக்கு வெளியே உள்ளனர். 35 சத வீதமான இஸ்லாமியர்களே வடக்கு கிழக்கில் உள்ளனர். வடக்கு கிழக்குக்கு வெளியே உள்ள இஸ்லாமிய சகோதரர்கள் தென் இலங்கையிலுள்ள பெரும் பான்மை மக்களின் தயவிலும் நட்பிலுமே தமது அரசியல் பொருளாதாரத்தை கட்டிவளர்த்து வருகின்றனர். அதனால் ஜனாதிபதித் தேர்தலில் அவர்களது வாக்குகள் தென் இலங்கை வேட்பாளருக்கானதே. அதனை யார் ஈர்ப்பதென்பதே அரசுக்கும் எதிர் கட்சியினருக்கும் உள்ள போட்டியாகும். அந்த புள்ளியிலேயே தென் இலங்கை அரசு கடந்தகாலத்தில் செய்த செயலுக்கு மன்னிப்பு கோரப்படு

கட்டுரையாளர்:
இலங்கையில் இருந்து
பேராசிரியர்
– K.T.கணேசலிங்கம் –



கிறது.

இரண்டு, அத்தகைய இஸ்லாமிய சமூகத்திடம் கோரியது போன்றதல்ல தமிழரிடம் கோரிய மன்னிப்பு. காரணம் தனித்தே நீதி அமைச்சரே முன் வைத்திருந்தார். வடக்கு கிழக்கு தமிழ் மக்களின் வாக்குகளை பெறுதல் என்பதற்கு அப்பால்தென் இலங்கையை மையப்படுத்தியுள்ள தமிழ் வாக்காளர்களை ஈர்க்கும் எண்ணமும் அதற்குள் அடங்கியிருக்க வாய்ப்புள்ளது. அதனைக் கடந்து நீண்டதூர நோக்குடனோ, அல்லது தமிழ் மக்கள் மீதான எண்ணத்தின் அடிப்படையில் வெளிப்படுத்தப்பட



வில்லை. அரசாகவோ, அமைச்சரவையிலோ, அல்லது பாராளுமன்ற உறுப்பினர் சார்பாக சபாநாயகரோ கோரவில்லை.

இதே நீதி அமைச்சர் கடந்த காலங்களில் நீதியையும், தீர்வையும் தமிழ் மக்கள் ஒன்றாகக் கோர முடியாது எனக் குறிப்பிட்டிருந்தமை நினைவு கொள்ளத்தக்கது. அத்தகைய ஒரு விடயமாகவே ஜீலை இனப்படுகொலை சார்ந்து தென் இலங்கை அரசியலில் பேசப்படுகிறது.

மூன்றாவது, கனடாவின் பிரதமர் ஜஸ்டின் ட்டுடோ யூலைக் கலவரம் தொடர்பில் அரசு மீது முன் வைத்த குற்றச்சாட்டுக்களும் தமிழ் மக்களுக்கு வெளிப்படுத்திய ஆதரவும் தென் இலங்கைக்கு அதிக தேவையை ஏற்படுத்தியிருக்கலாம். அதன் மூலம் ஒரு கையாளுகையை தமிழ் மக்கள் மத்தியில் மட்டுமல்ல உலகளாவிய தளத்திலும் ஏற்படுத்துவதாகவே தெரிகிறது. ஜனாதிபதி தேர்தலை அண்டிய காலத்தில் தென் இலங்கைக்கு தேவையானதாக உள்ளதாகவே தோன்றுகிறது.

எனவே தென் இலங்கை அரசியலில் ஏற்பட்டுள்ள மன்னிப்புக் கோரல் என்பது அரசியல் நோக்கம் கொண்டதே அன்றி யதார்தமாக தமிழரது இனப்பிரச்சினைக் கான தீர்வுக்கான நடவடிக்கையாக தென்படவில்லை. தமிழ் மக்களை இலங்கைத் தீவுக்குள் சுயநிர்ணயத்திற்குரியவர்களாக கருதும் நிலையிலோ அல்லது தெளிவான அதிகாரப் பகிர்வின் அடிப்படையில் அதாவது சமஷ்டியின் அடிப்படையிலோ தீர்வை முன்வைத்த சுமூகமான ஆரோக்கியமான தேசத்தைக் கட்டியெழுப்பும் (22ம் பக்கம் பார்க்க)

# தமிழ் பொது வேட்பாளர்:- பழைய வாய்ப்பன்!

கட்டுரையாளர்:-
கிளிநொச்சியில் இருந்து
- கருணாகரன் -



தோல்வி ஒரு போதுமே பெரிதல்ல. தோற்றுக் கொண்டேயிருப்பது தான் பெரிது. அதுவே மிகப் பெரிய துயரமும் அவலமும்.

ஈழத் தமிழரின் அரசியல், தோற்றுக் கொண்டேயிருக்கும் ஒன்றாகி விட்டது. அதனால் தான் தமிழர்கள் எப்போதும் தோற்றப் போன நிலையில் இருக்கிறார்கள்.

ஆயுதப் போராட்டத்துக்கு முந்திய அரசியலும் தோற்றுப்போனது. ஆயுதப் போராட்ட அரசியலும் தோற்றுப் போனது.

ஆயுதப் போராட்டத்துக்குப் பின்னான தற்போதய அரசியலும் தோற்றுப் போனதாகவே உள்ளது. இதிலும் இரண்டு வகை உண்டு.

ஒன்று நம்மைப் பிறர் எதிராளர்கள் தோற்கடிப்பது. மற்றது, நம்மை நாமே தோற்கடிப்பது. அநேகமான சந்தர்ப்பங்களிலும் நம்மை நாமே தோற்கடிப்பதே நடந்து கொண்டிருக்கிறது.

அப்படித்தானுள்ளது, தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்த வேண்டும் என்று ஜனாதிபதித் தேர்தலையொட்டிச் சிலர், சாகிறோம் பந்தயம் பிடி என்ற மாதிரி, விடாப்பிடியாக முன்னெடுத்துக் கொண்டிருக்கும் தேர்தற் திருவிழா ஏற்பாடுகளும். (இதற்காக யாழ்ப்பாணத்தில் ஒரு பத்திரிகை எழுதிக் கொண்டிருக்கும் நகைச்சுவைகள் ஏராளம்). அதற்குத் தோதாக தமிழ் மக்கள் பொதுச்சபை, தமிழ்த்தேசியப் பொதுக் கட்டமைப்பு என்று கிழமைக்குக் கிழமை ஒவ்வொரு அமைப்புகளின் உருவாக்கமும் நடக்கிறது. இப்படி இதற்கு முன்னர் உருவாக்கப்பட்ட அமைப்புகளுக்கு (தமிழ் மக்கள் பேரவை, 2 ... போன்றவைக்கு) என்ன நடந்தது என்று யாருக்குமே தெரியாது.

இந்த வார வெளியீடான தமிழ்த் தேசியக் கட்மைப்பின் அடுத்த கூட்டம் எப்படி நடக்கும்? அதில் யாரெல்லாம் கலந்து கொள்வார்கள் என்றே தெரியாது. அந்தளவுக்குக் குழப்பங்கள் ஒவ்வொருவருக்குள்ளும்.

இருந்தாலும் இழுத்துப் பிடித்து தலையைக் கொடுத்தே ஆக வேண்டும் என்று இதற்குப் பிள்ளையார் சுழி போட்டவர்கள் (களப்புலிகள்) இராப் பகலாக ஓடிக் கொண்டிருக்கிறார்கள்.

2005 இல் ஜனாதிபதித் தேர்தலின் போது எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு நிகரானதே, இப்போது எடுக்கப்பட்டிருக்கும் இந்தப் பொது வேட்பாளர் விவகாரமும். அதற்குப் பரிசாக முள்ளி வாய்க்கால் முடிவுகள் கிடைத்தன. இதற்குப் பரிசாக...!?

நிச்சயமாக இதற்கான எதிர்விளைவுகளையும் தமிழ்ச்சமூகம் சந்திக்கத் தான் போகிறது. கெடுகுடி சொற் கேளாது என்பார்களே! அப்படித் தான் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. எப்போதும் சாவுடன், அழிவுடன், பின்னடைவுடன், தோல்வியுடன் விளையாடிப் பார்ப்பது.

தமிழ்ச் சமூகத்தின் உளக்குறைபாடு அல்லது சிந்தனைக் கோளாறுதான் இதற்குக் காரணமாகும். எதையும் தவறாகக் கணிப்பிடுவது. அல்லது எதையும் பிழையாகப் பார்க்க முற்படுவது.

ஒரு நண்பர் அடிக்கடி சொல்வார், பிழையாகக் கணக்கைச் செய்தால் விடையும் பிழையாகத் தான் வரும்'' என்று. இதை உணர மறுத்து, தவறைப் பிறர் மேல் போட்டுத் தப்பித்துக் கொள்வதே தமிழர்களின் வேலையாக (அரசியலாக) உள்ளது. அநேகமான தமிழர்கள் எப்பொழுதும் சொல்லிக் கொள்ளும் தலையான வசனம் ஒன்றுள்ளது, அரசு எங்களை ஏமாற்றி விட்டது என.

காலா காலமாக ஏமாற்றப்பட்டோம். இனியும் அப்படி ஏமாற முடியாது என்று தமிழரசுக் கட்சியின் தலைவரான மாவை சேனாதிராஜாவும் திருவாய் மலர்ந்துள்ளார். சேனாதிராஜா மட்டுமல்ல, பொதுவேட்பாளரை நிறுத்த வேணும் என்று அடம் பிடிக்கின்ற எல்லோரும் தான் அப்படிச் சொல்கிறார்கள். ரணில் ஏமாற்றி விட்டார். ராஜபக்ஸக்கள் ஏமாற்றி விட்டனர். மைத்திரி ஏமாற்றி விட்டார். அதற்கு முன்பு சந்திரிகா, விஜயதுங்க, பிரேமதாச, ஜே.ஆர். ஜெயவர்த்தன, சிறிமா பண்டாரநாயக்க எல்லாம் ஏமாற்றி விட்டார்கள் என்று. போதாக் குறைக்கு இந்தியா ஏமாற்றி விட்டது. சர்வதேச சமூகம் ஏமாற்றி விட்டது என்றும் ஒப்பாரி வைத்துக் கொண்டிருக்கிறோம்.

இப்படி எல்லோரும் ஏமாற்றி விடக் கூடிய அளவுக்குத் தான் நம்முடைய தமிழ்த் தலைமைகளும் தமிழ் அரசியலும் உள்ளது. ஒரு புள்ளியிற் கூட அவர்களைத் தோற்கடிக்கக் கூடிய வெல்லக் கூடிய அரசியலே முன்னெடுக்கப்படவில்லை.

ஒரு தலைமை கூட சிங்களப் பேரினவாதப் போக்கைக் கட்டுப்படுத்தக் கூடியவாறு தமிழ் அரசியலை தமிழ் பேசும் மக்களின் அரசியலை மேற்கொள்ளவில்லை.

காரணம், தோற்றுப் போகும் சிந்தனையை தோற்கடிக்கக் கூடிய அரசியல் வழி முறையைத் தேர்ந்தெடுத்துக் கொண்டதேயாகும். அதாவது ஒற்றைப்படைத்தன்மையான அணுகுமுறை. கறுப்பு — வெள்ளைச் சிந்தனை.

முக்கியமாக உணர்வு சார்ந்த உணர்ச்சிகரமான அரசியல் முன்னெடுப்பே இதுவாகும். இது அறிவுக்கு எதிரானது என்பதால் தான் அறிவுசார் அரசியலை மொழிவோரையும் முன்னெடுப்போரையும் உணர்வாளர்கள், துரோகிகள் என்று எடுத்த எடுப்பிலேயே குற்றம் சாட்டி நிராகரித்துத் தள்ளி விட முயற்சிக்கிறார்கள்.

அறிவுசார் அரசியலை நிராகரித்தால் அதற்குப் பிறகு எங்கே இராஜதந்திரம் (Diplomacy) தந்திரோபாயம் (strategy), புதிய அணுகுமுறைகள் (New Approaches), மீள் பரிசீலனைகள் (Reconsiderations) திருத்தங்கள் (corre ctions) மாற்றங்கள் (changes) வளர்ச்சி (Development), வளர்ச்சி (Innovation) எல்லாம்? இவையெல்லாம் அரசியலின் அடிப்படைகள். அரசியல் ரீதியான விளைவுகளுக்கானவை. இவற்றை நிராகரித்து விட்டுத் தமிழ்ச் சமூகம் தனக்குள் சுருங்கிக் கொள்கிறது.

குறைந்த பட்சம் அது இலங்கைத் தீவில் தமிழ்பேசும் சமூகங்களாகக் கூடத் திரள முடியாமல் திணறுகிறது. இந்த லட்சணத்தில் தான் அது பிராந்திய சக்தியாகிய இந்தியாவையும் சர்வதேச சமூகத்தையும் தன் வயப்படுத்தப் போகிறதாம்! இதெல்லாம் நடக்கிற காரியமா? கற்பனைக் குதிரைகள் ஓடுவதுமில்லை, களைப்பதுமில்லை. என்பதால் தான் நிரந்தரத் தோல்வியைத் தமிழ்ச்சமூகம் பெற்றுக் கொண்டிருக்கிறது. கடந்த 75 ஆண்டுகால அரசியல் வரலாற்றில் வெற்றி பெறுவதற்கான வாய்ப்புகள் வரவேயில்லை என்று சொல்ல முடியாது. அந்த வாய்ப்புகளைச் சரியாகக் கையாளக்கூடிய நம்பிக்கையும் திறனும் நம்மிடம் இல்லாமலிருந்ததே உண்மை. இன்னும் இந்தத் தடுமாற்றம் நீடிக்கிறது.

இதை எத்தனை தடவை சொன்னாலும் புரிந்து கொள்ள மறுப்பதே நிகழ்கிறது. காரணம், நிலைமையைப் புரிந்து கொள்ளாத, உண்மையை விளங்க மறுக்கின்ற, யதார்த்தத்தை உணரத் தவறும் அதி தீவிரம், அதி புத்திசாலித்தனம், அதி தூய்மைவாதம், அவநம்பிகை என்ற பொருந்தாக் குணங்களே. இது தொடரும் தோல்விகளை உண்டாக்குகிறது. தொடரும் தோல்விகளைத் தாக்குப் பிடிக்க முடியாமல் பலரும் நாட்டை விட்டு வெளியேறுகிறார்கள். இந்த வெளியேற்றத்தைக் கட்டுப்படுத்தக் கூடிய ஆற்றலோ வல்லமையோ புத்திசாலித்தனமோ, அரசியல் நடவடிக்கையோ எவரிடத்திலும் இல்லை.



குறைந்த பட்சம் கட்சிகளை அரசியலாளர்களை ஒரு குடையின் கீழ்க் கொண்டு வரக் கூடிய திறனும் உணர்வும் யாரிடத்திலும் இல்லை. அப்படி ஒரு குடையின் கீழ் கொண்டு வருவதற்கு இரண்டு வழிகள் இரண்டு அடிப்படைகள் உண்டு.


1. கொள்கை ரீதியாக ஒன்றிணைவது (Unity on principle)

2.பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கும் விதத்தில், அவற்றுக்குத் தீர்வு காணும் அடிப்படையில் ஒன்று திரள்வது (Based on the issues) இவை இரண்டின் அடிப்படையிலும் ஒன்றிணையவோ, அரசியலை முன்னெடுக்கவோ, மக்களுக்கான பணிகளைச் செய்யவோ யாரும் தயாரில்லை.

பதிலாக அவ்வப் போது எதையாவது சொல்லித் தண்ணி காட்டுவதற்கே முயற்சிக்கின்றனர். இது மேலும் மேலும் தோல்விகளைத் தமிழ்ச் சமூகத்துக்குக் கொடுக்கப்போகிறது. இதனால் நிரந்தரத் தோல்விக்கு தமிழ்ச்சமூகம் தள்ளப்படப்போகிறது. என்றபடியால் தான் தமிழ்ச்சமூகத்தையும் (22ம் பக்கம் பார்க்க)



Friends MATRIMONY



www.friendsmatrimony.com
+1 416 477 2259 | +1 647 700 7208
+1 647 709 1761 | +1 416 709 1536
GTA Squre-5215 Finch Ave. E. Unit 256 and 257
Toronto, M1S 0C2



## மணமகள்

**ID08120684** F
27yrs, 5'4'' , Single , Rohini , 2 Sevai , Bachelors.. , Director of.., Canada

**ID08120644** F
29yrs, 5'7" , Single , Visaakam , 12 Sevai , Bachelors.. , Business Analyst.. , Canada

**ID08120662** F
32yrs, 5'2" , Single , Pooraadam , 11 Sevai , Bachelors.. , Product Management, Canada

**ID08120637** F
31yrs, 5'6" , Single , Bharani , N/A Sevai , Bachelors.. , Analyst , Canada

**ID08120633** F
38yrs, 5'2" , Single , Avittam , 2 Sevai , High School , District manager , Canada

**ID08120640** F
29yrs, 5'4" , Single , Kettai , 2 Sevai , Postgraduate.. , Social Media.. , Canada

**ID08120574** F
24yrs, 5'3" , Single , Uthiram , 12 Sevai , Bachelors.. , Clerk , Canada

**ID08120622** F
34yrs, 5'4" , Single , Uthirattathi , N/A Sevai , Masters Degree , development.. , Sri Lanka

**ID08120445** F
30yrs, 5' , Single , Mrigasheersham , 5 Sevai , Bachelors.. , Registered.. , Canada

**ID08119978** F
28yrs, 5'4" , Single , Pooraadam , 1 Sevai , Bachelors.. , Manager Hospitality.. , Canada

**ID08119833** F
32yrs, 5'4" , Single , Aayilyam , 4 Sevai , Diploma , Pharmacy Technician , Canada

**ID08118630** F
30yrs, 5'4" , Single , Uthirattathi , N/A Sevai , Bachelors.. , Case Management.. , Canada

**ID08120537** F
33yrs, 5' , Divorced , Visaakam , N/A Sevai , Bachelors.. , Optometrist , Australia

**ID08120557** F
29yrs, 5'4" , Single , Uthiraadam , N/A Sevai , Diploma , Cosmetics.., Canada

**ID08120696** F
30yrs, 5'1" , Single , Thiruvonam , N/A Sevai , Masters Degre , Clinical Research.. , Canada

**ID08120686** F
32yrs, 5'3" , Single , Swaathi , 2 Sevai , Postgraduate.. , Montessori.. , United States

**ID08120681** F
28yrs, 5'3" , Single , Mrigasheersham , 2 Sevai , Bachelors.. , Nurse , Canada

**ID08120676** F
26yrs, 5'3" , Single , Chithirai , 4 Sevai , Bachelors.. , Program Coordinator , Canada

**ID08120533** F
51yrs, 5'1" , Single , Makam , N/A Sevai , High School , Professional.. , Sri Lanka

**ID08120620** F
28yrs, 5'6" , Single , Not Specified , N/A Sevai , Postgraduate.. , Mortgage Funder.. , Canada

**ID08120610** F
21yrs, 5'2" , Single , Revathi , N/A Sevai , Diploma , Hairstylist , Sri Lanka

**ID08119986** F
37yrs, 5'3" , Single , Poorattathi , 12 Sevai , Bachelors.. , Doctor , Canada

**ID08115173** F
37yrs, 5'3" , Single , Bharani , 2 Sevai , Masters Degree , Electronic.. , Sri Lanka

**ID08120390** F
28yrs, 5'2" , Single , Poorattathi , N/A Sevai , Bachelors.. , Accountant , Canada

**ID08120572** F
38yrs, 5'3" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Director Banking , Canada

**ID08120566** F
40yrs, 5'3" , Divorced , Karthigai , N/A Sevai , Bachelors.. , Payroll Specialist , Canada

**ID08120567** F
25yrs, 5'2" , Single , Aswini , 2 Sevai , Bachelors.. , Tba , Canada

**ID08120558** F
28yrs, 5'4" , Single , Pooram , 6 Sevai , Bachelors.. , Stundent , Sri Lanka

**ID08120565** F
27yrs, 5'5" , Single , Thiruvaathirai , 8 Sevai , Postgraduate.. , Studies , Sri Lanka

**ID08120543** F
42yrs, 4'8" , Seperated , Not Specified , N/A Sevai , Diploma , Houspital.. , United Kingdom

## மணமகன்



**ID08120673** M
35yrs, 5'2'' , Single , Pooraadam, 11 Sevai , Diploma , Business Owner , Canada

**ID08120642** M
45yrs, 5'11" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Physicians.. , Canada

**ID08120616** M
33yrs, 5'5" , Single , Bharani , 11 Sevai , Bachelors.. , Insurance.. , Canada

**ID08120613** M
32yrs, 5'7" , Single , Makam , N/A Sevai , Bachelors.. , Engineer , Canada

**ID08120559** M
31yrs, 5'8" , Single , Chathayam/sadayam , 11 Sevai , Diploma , BUSINESS OF.. , Canada

**ID08120469** M
35yrs, 6'1" , Single , Uthirattathi , 8 Sevai , Bachelors.. , Own business.. , Canada

**ID08113686** M
45yrs, 5'7" , Single , Pooram , 2 Sevai , Diploma , Staff- Air.. , Canada

**ID08120335** M
30yrs, 5'7" , Single , Revathi , 4 Sevai , Diploma , Business-.. , Canada

**ID08120598** M
30yrs, 5'10" , Single , Moolam , 7 Sevai , Bachelors.. , Electrical. , Canada

**ID08117127** M
42yrs, 6' , Divorced , Avittam , 1 Sevai , Masters Degree , Auditor , Canada

**ID08120594** M
30yrs, 5'11" , Single , Rohini , 9 Sevai , High School , Manager , Canada

**ID08120589** M
36yrs, 5'5" , Single , Bharani , 9 Sevai , Bachelors.. , Software Engineer , Canada

**ID08120690** M
39yrs, 5'6" , Single , Swaathi , N/A Sevai , High School , Building Construction , Sri Lanka

**ID08120281** M
28yrs, 5'11" , Single , Uthirattathi , 10 Sevai , Bachelors. , Customer Quality.. , United States

**ID08120694** M
39yrs, 5'10" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Teacher , Canada

**ID08120670** M
30yrs, 5'11" , Single , Poosam , 12 Sevai , Diploma , Team leader , Canada

**ID08120660** M
32yrs, 5'10" , Single , Anusham , 1 Sevai , Bachelors.. , Mortgage Specialist , Canada

**ID08120550** M
47yrs, 5'6" , Divorced , Bharani , N/A Sevai , Bachelors.. , Own Business , Canada

**ID08120617** M
31yrs, 5'11" , Single , Swaathi , 12 Sevai , High School , Restaurant.. , Canada

**ID08120601** M
58yrs, 5'3" , Divorced , Poorattathi , N/A Sevai , Bachelors.. , RMT Therapist , Canada

**ID08120600** M
31yrs, 5'8" , Single , Thiruvonam , N/A Sevai , High School , Mechanical.. , Qatar

**ID08120580** M
36yrs, 5'8" , Single , Pooram , 12 Sevai , Diploma , Finance , Canada

**ID08120579** M
30yrs, 5'11" , Single , Aswini , 6 Sevai , Masters Degree , Engineer , Canada

**ID08120402** M
35yrs, 5'5" , Single , Uthiraadam , 2 Sevai , Diploma , A Z Truck.. , Canada

**ID08120570** M
31yrs, 5'10" , Single , Bharani , 7 Sevai , High School , Property Supervisor , Canada

**ID08120549** M
32yrs, 5'7" , Single , Anusham , 7 Sevai , Bachelors.. , Pharmacy Dr , Canada

**ID08120564** M
33yrs, 5'11" , Single , Hastham , 8 Sevai , Bachelors.. , Website Administrator , Canada

**ID08120661** M
32yrs, 5'11" , Single , Rohini , 4 Sevai , Bachelors.. , IT Technician , Canada

**ID08120635** M
41yrs, 5'8" , Single , Visaakam , N/A Sevai , Bachelors.. , Admin IT , United States

**ID08120521** M
31yrs, 5'11" , Single , Uthirattathi , 1 Sevai , Postgraduate.. , Grandmaall.. , Canada

# கமலா ஹரிஸ்:- கறுப்பரா? இந்தியரா? இனம் கல்வி குறித்து விமர்சித்த டிரம்ப்!

கறுப்பின ஊடகவியலாளர்களுக்கான மாநாட்டில் கலந்து கொண்டு பேசிய அமெரிக்காவின் முன்னாள் அதிபர் டொனால்ட் டிரம்ப், துணை அதிபர் கமலா ஹாரிஸின் இன அடையாளம் குறித்து கேள்வி எழுப்பியுள்ளார்.

துணை அதிபரும், ஜனநாயகக் கட்சியின் அதிபர் வேட்பாளராகக் கருதப்படுபவருமான கமலா ஹாரிஸின் இன அடையாளமான ஆசிய – அமெரிக்க பாரம்பரியத்தை பற்றி சில காலங்களுக்கு முன்பு வரை பேசியதே இல்லை என்றார் டிரம்ப்.

மேலும், மிக சமீபத்தில் தான் `அவர் கறுப்பர் இன பெண்ணாக மாறினார்.` என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.



சில ஆண்டுகளுக்கு முன்பு அவர் கறுப்பர் இனப் பெண்ணாக மாறிய போது தான் அவர் கறுப்பர் இனப் பெண் என்றே எனக்கு தெரியும். ஆனால் தற்போது அவர் கறுப்பர் இனப்பெண்ணாகவே அறியப்பட விரும்புகிறார்.` என்று டிரம்ப் கூறியுள்ளார்.

கடந்த புதன் அன்று சிக்காகோவில் நடைபெற்ற தேசிய கறுப்பின ஊடகவியலாளர்கள் சங்கம் நடத்திய மாநாட்டில் பேசிய அவர் இதனை தெரிவித்துள்ளார். எனக்கு தெரியவில்லை... அவர் இந்தியரா இல்லை... கறுப்பின பெண்ணா?` என்றும் கேள்வி எழுப்பியுள்ளார்.

இதற்கு எதிர் வினையாற்றிய கமலா ஹாரிஸ், `பிளவுபடுத்தும், மரியாதையற்ற இந்த கருத்து டிரம்பின் நெடுநாள் செயலாகும்` என்று குறிப்பிட்டார்.

ஹஸ்டனில் நடந்த `சிக்மா காமா ரோ` என்ற கறுப்பின பெண்கள் சங்கத்தின் கூட்டத்தில் பேசினார் அவர் கமலா ஹாரிஸ். நம்முடைய வேறுபாடுகள் நம்மை பிரிக்காது என்பதை உணர்ந்து கொண்ட தலைவர் தான் நமக்கு தேவை` என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்திய – ஜமைக்கா வம்சாவளியை சேர்ந்த பெற்றோர்களுக்கு மகளாக பிறந்த கமலா ஹாரிஸ் அமெரிக்காவின் முதல் கறுப்பின மற்றும் ஆசிய – அமெரிக்க பெண் துணை அதிபராவார்.

வரலாற்று ரீதியாக கறுப்பின பல்கலைக் கழகமாக அறியப்பட்ட ஹோவர்ட் பல்கலைக்கழகத்தில் படித்தார். பிறகு ஆல்பா கப்பா ஆல்பா பெண்கள் சங்கத்தில் அவர் சேர்ந்தார். 2017ம் ஆண்டு செனட்டில் காலடி எடுத்து வைத்த அவர், அமெரிக்க காங்கிரஸின் கறுப்பின குழுவில் தன்னை இணைத்துக் கொண்டார்.

சிகாகோவில் ஏ.பி.சி. செய்திகளின் செய்தியாளரும் அந்த நிகழ்வின் நடுவருமான ரேச்சல் ஸ்காட்டுடனான விவாதத்தின் போது இந்த கருத்துகளை வெளியிட்டார் டிரம்ப்.

கமலாவின் இனம் குறித்து பேசிய அவர், `நான் அனைவரையும் மதிக்கிறேன். ஆனால் கமலா அப்படி மதிக்கவில்லை. ஆரம்ப காலம் தொட்டே இந்திய அடையாளத்தை பயன்படுத்தி வந்த கமலா, திடீரென தன்னை கறுப்பின பெண்ணாக அடையாளப் படுத்தத் தொடங்கியிருக்கிறார்.` என்று பேசினார் டிரம்ப்.

வெள்ளை மாளிகை ஊடகச் செயலாளரான கரீன் ஜீன்-பியரி, `ஒருவர் யார் என்றும், எப்படி அவர்களை அடையாளப்படுத்திக் கொள்கிறார்கள் என்றும் கூற ஒருவருக்கும் உரிமை இல்லை. இது எந்த ஒரு நபரின் உரிமையும் கிடையாது.` என்று குறிப்பிட்டார்.

கறுப்பினத்தின் நடுவராக டிரம்பை நியமித்தது யார்? என்று கேள்வி எழுப்பினார் நியூயார்க்கின் பிரதிநிதியான ரிச்சி டோரஸ்.

கடந்த கால இனவெறியின் மிச்சம்,` என்று டிரம்பை விமர்சித்துள்ளார் ரிச்சி.

தன்னை எதிர்த்து போட்டியிடும் வேட்பாளர்களை அவர்களின் இனம் சார்ந்து தாக்குவதை வழக்கமாக கொண்டிருக்கிறார் டிரம்ப். அமெரிக்காவின் முதல் கறுப்பின அதிபரான பாரக் ஒபாமா அந்நாட்டின் குடிமகனே இல்லை என்று தவறாக கூறினார்.

ஐ.நாவின் முன்னாள் தூதரும், குடியரசுக் கட்சியில் தன்னை எதிர்த்துப் போட்டியிட்டவருமான நிக்கி ஹாலேவின் பெற்றோர்கள் அமெரிக்க குடிமக்கள் இல்லை என்றும் திரித்துக் கூறினார்.

கமலா ஹாரிஸ் ஜனநாயகக் கட்சியின் வேட்பாளராகலாம் என்று தெரிய வந்ததில் இருந்து அவர் பல்வேறு விமர்சனங்களை சந்தித்து வருகிறார். அவரின் இனத்திற்காகத் தான் அவர் வேட்பாளராக தேர்வு செய்யப்பட்டிருக்கிறார் என்று குடியரசுக் கட்சியினர் விமர்சித்துள்ளனர்.

டென்னெஸியை சேர்ந்த குடியரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான டிம் பர்செட், கமலா ஹாரிஸை 'DEI' துணை அதிபர் என்று அழைத்தார். அது பன்முகத்தன்மை (Diversity), நியாயம் (சமத்துவம்) மற்றும் உள்ளடக்கிய (Inclusion) என்ற பொருளை தருகிறது.

மாநாட்டில் பேசிய டிரம்பிடம் ஸ்காட், கமலா ஹாரிஸ் உண்மையாகவே இந்த மூன்று கூறுகளையும் பிரதிபலிக்கும் ஒருவர் என்று நம்புகிறீர்களா என்று கேட்டார். அதற்கு அவர், எனக்கு தெரியவில்லை. ஆனால் இருக்கலாம் என்று கூறினார்.

கமலா ஹாரிஸ் இந்திய பாரம்பரியத்தில் வளர்க்கப்பட்டது குறித்தும், இந்தியாவுக்கு வருகை புரிந்தது பற்றியும் குறிப்பிட்டிருக்கிறார். மேலும் அவரின் அம்மா, அவரின் இரண்டு பெண் குழந்தைகளையும் கலிஃபோர்னியாவின் ஒக்லாந்து கறுப்பின கலாசாரத்தில் வளர்த்திருக்கிறார் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சட்டப் படிப்பு படித்த கமலா ஹாரிஸ் அவருடைய பார் தேர்வில் தோல்வி அடைந்துவிட்டார் என்றும் டிரம்ப் கூறினார். அவரின் கருத்து மாநாட்டில் கலந்து கொண்டவர்கள் மத்தியில் அதிர்வலையை ஏற்படுத்தியது.

நான் உங்களுக்கு உண்மையை சொல்கிறேன். அவர் (கமலா) பார் தேர்வில் வெற்றி பெறவில்லை. அவர் வெற்றி பெறுவார் என்றும் நினைக்கவில்லை. ஆனால் என்ன நடந்தது என்று தெரியவில்லை. ஒருவேளை வெற்றி பெற்றிருக்கலாம்.` என்றும் அவர் கூறினார்.

கலிஃபோர்னியா பல்கலைக்கழகத்தின் ஹாஸ்டிங்க்ஸ் சட்டக் கல்லூரியில் 1989ம் ஆண்டு பட்டம் பெற்றார் கமலா. கமலா ஹாரிஸ் அவருடைய



முதல் தேர்வில் தோல்வி அடைந்தது பற்றியும், அடுத்த முயற்சியில் வெற்றி பெற்றார் என்றும் தி நியூயார்க் டைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது. இந்த தேர்வு எழுத வரும் நபர்களில் பாதிக்கும் குறைவான நபர்களே அதில் தேர்ச்சி அடைகின்றனர் என்று கலிஃபோர்னியா மாகாண பார் கவுன்சில் அறிவித்துள்ளது.

சிகாகோவில் டிரம்புடன் நடைபெற்ற விவாத நிகழ்ச்சியானது ஆரம்பம் முதலே காரசாரமாக இருந்தது.

மிகவும் புண் படும்படியான அறிமுகத்தை` வழங்கியிருக்கிறீர்கள் என்று ஸ்காட்டை விமர்சனம் செய்தார் டிரம்ப். ரேச்சல் ஸ்காட் தன்னுடைய விவாத நிகழ்வை துவங்கும் போது, டிரம்ப் கறுப்பின மக்களுக்கு எதிராக பேசிய கருத்துகள் குறித்து கேள்வி எழுப்பினார்.


கறுப்பின ஊடகவியலாளர்களின் கேள்வி இனவெறியுடையதாகவும் முட்டாள்தனமாக இருக்கிறது என்று டிரம்ப் கூறியதை மேற்கோள் காட்டினார் ஸ்காட். மேலும் வெள்ளையின மேலாதிக்கம் கொண்ட நபருடன் மார்-ஏ-லாகோவில் (டொனால்ட் டிரம்பின் இருப்பிடம்) இரவு உணவை உட்கொண்டார் என்றும் குற்றம் சாட்டினார். இந்த நாட்டில் உள்ள கறுப்பின மக்களை நான் மதிக்கிறேன். அவர்களுக்காக நிறைய செய்திருக்கிறேன்.` என்றும் குறிப்பிட்டுள்ளார்.

விவாதம் முடிந்த பிறகு, இந்த நிகழ்வு குறித்தும் விமர்சனங்களை முன் வைத்தார் டொனால்ட் டிரம்ப். தன்னுடைய சமூக வலைதள பக்கத்தில், `கேள்விகள் எல்லாம் மிகவும் முரட்டுத்தனமாகவும் மோசமாகவும், கருத்துச் சொல்வது போன்ற தொனியில் இருந்தாலும் கூட நாம் சிறப்பாக விவாதித்திருக்கிறோம்.` என பதிவிட்டிருந்தார்.


-நன்றி:- பிபிசி



# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?




மேடராசி அன்பர்களே! வாக்கு வன்மையால் நன்மை உண்டாகும். செய்யும் காரியத்தை சிறப்பாகவும், நேர்மையாகவும் செய்து முடித்து மற்றவர்களிடம் பாராட்டு பெறுவீர்கள். எதிர்ப்புகள் விலகும். காரிய தடைகள் நீங்கும். தொழில் வியாபாரம் தொடர்பான பணிகளில் வேகம் பிடிக்கும். பழைய பாக்கிகளை வசூல் செய்வதில் மும்முரமாக ஈடுபடுவீர்கள். வேலை பளு இருந்தாலும் எல்லா பணிகளையும் திறம்பட செய்து முடிப்பார்கள்.





ரிஷபராசி அன்பர்களே! எடுக்கும் காரியங்கள் வெற்றியை தரும். பணவரத்து வழக்கத்தை விட அதிகரிக்கும். ஆனால் செலவும் அதற்கு ஏற்றார்போல் இருக்கும். அனுபவபூர்வமான அறிவு திறன் அதிகரிக்கும். தொழில் வியாபாரம் சிறப்பாக இருக்கும். பேச்சாற்றலால் வாடிக்கையாளர்களை கவர்ந்து இழுப்பீர்கள். பங்கு மார்க்கெட் லாபம் ஓரளவு கூடும். உத்யோகத்தில் பதவி உயர்வு அல்லது புதிய பொறுப்புகள் வந்து சேரும்.





மிதுனராசி அன்பர்ககளே! கொடுத்த வாக்கை காப்பாற்ற மிகவும் பாடுபட வேண்டிஇருக்கும். எனவே யாருக்கும் எந்த வாக்குறுதியையும் அளிக்காமல் இருப்பது நல்லது. அடுத்தவருக்கு செய்யும் உதவிகள் சில நேரத்தில் உங்களுக்கு எதிராகவே மாறலாம் கவனமாக செயல்படுவது நல்லது. தொழில் வியாபாரம் மந்தமாக இருந்தாலும் பழைய பாக்கிகள் வசூலாவது ஆறுதலை தரும். மிகவும் கவனமாக பணிகளை கவனிப்பது நல்லது.





கடகராசி அன்பர்களே! எடுத்த காரியங்களை வெற்றியுடன் செய்து முடிப்பீர்கள். எங்கும் எல்லோரிடத்திலும் மதிப்பும், மரியாதையும் அதிகரிக்கும். அடுத்தவர்களுக்காக உதவிகள் செய்வதில் உற்சாகம் உண்டாகும். தொழில், வியாபாரம் திருப்திகரமாக நடக்கும். எழுத்து தொழிலில் இருப்பவர்கள் முன்னேற்றம் காண்பர். தொழில், வியாபாரத்தில் பணியாட்கள் மூலம் நன்மை உண்டாகும். மேலதிகாரிகளின்பாராட்டடைப் பெறுவீர்கள்





சிம்மராசி அன்பர்களே! வீண் பேச்சை குறைத்துக் கொண்டு செயலில் ஈடுபடுவது வெற்றியை தரும். உங்களை சுற்றி வருபவர்களால் செலவு உண்டாகும் . திடீர் கோபம் ஏற்பட்டு அதனால் அடுத்தவர்களிடம் சண்டை உண்டாக நேரலாம். எனவே மிகவும் நிதானமாக இருப்பது நல்லது. தொழில், வியாபாரம் தொடர்பான விஷயங்களை மற்றவர்களிடம் கூறி ஆலோசனை கேட்பதைத் தவிர்க்கவும்.




கன்னிராசி அன்பர்களே! கவனமாக இருக்க வேண்டியது அவசியம். வாகனங்களில் செல்லும் போதும், பணிபுரியும் இடத்தில் ஆயுதங்களை கையாளும் போதும் கவனம் தேவை. தொழில் வியாபாரத்தில் சற்று விழிப்புடன் இருப்பது நல்லது. பொருட்களை வாடிக்கையாளர்களுக்கு அனுப்பும்போது கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. எதிர்பார்த்த பணம் கைக்கு வர தாமதம் ஆகலாம். அலைச்சல் வேலை பளுவை சந்திக்க நேரிடும்.





துலாம்ராசி அன்பர்களே! எந்த ஒரு காரியத்திலும் லாபம் உண்டாகும். வெளியூர் அல்லது வெளிநாட்டு பயணம் மூலம் நன்மை உண்டாகும். எதை விரும்பினாலும் அது கிடைக்க வழி தெரியும். தொழில் வியாபாரம் முன்னேற்றம் அடையும். எதிர்பார்த்த ஆர்டர்கள் கிடைக்கும். தொழில் விரிவாக்கம் செய்யும் எண்ணம் மேலோங்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் எதிர்பார்த்த பணம் கிடைக்க பெறுவார்கள். மேலதிகாரிகளின் ஆதரவும் இருக்கும்.





விருச்சிகராசி அன்பர்களே! ஆக்கபூர்வமான யோசனைகள் உண்டாகும். மனதில் இருந்த குழப்பங்கள் நீங்கி தெளிவான முடிவுகளை எடுப்பீர்கள். சாமர்த்தியமாக செயல்பட்டு காரிய வெற்றி காண்பீர்கள். தொழில் வியாபாரம் சிறப்பாக நடக்கும். வியாபாரம் தொடர்பான பயணங்கள் செல்வதன் மூலம் கூடுதல் லாபம் கிடைக்கப் பெறுவீர்கள். தொழிலை விரிவுபடுத்த ஆலோசனைகளை மேற்கொள்வீர்கள். உத்யோகத்தில் செயல்திறமை வெளிப்படும்.








தனுசுராசி அன்பர்களே! எதையும் எதிர்த்து நிற்பதை தவிர்த்து அனுசரித்து செல்வது முன்னேற்றத்திற்கு உதவும். சொத்துக்களை வாங்கும்போதும், விற்கும் போதும் கவனமாக இருப்பது நல்லது. தொழில், வியாபாரம் சற்று நிதானமாக நடக்கும். எதிர்பார்த்த லாபம் இருந்தாலும் தொழில் தொடர்பான செலவும் கூடும். உத்யோகத்தில் கூடுதலாக பணியாற்ற வேண்டி இருக்கும். சனிபகவானை வழிபாடு செய்யவும்.




மகரராசி அன்பர்களே! எதிர்பாராத செலவுகள் வந்து சேரும். அடுத்தவர்களுக்காக உதவி செய்வது மற்றும் அவர்களுக்காக பரிந்து பேசுவது போன்றவற்றை செய்யும் போது கவனம் தேவை. இல்லையெனில் வீணான அவசொல் வாங்க நேரிடும்.தொழில் வியாபாரம் வழக்கம் போல் இருக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் சக ஊழியர்களிடம் கவனமாக பேசி பழகுவது நல்லது.




கும்பராசி அன்பர்களே! விருப்பத்திற்கு மாறாக எதுவும் நடக்கும். எதிர்ப்புகள் அகலும். பணவரத்து திருப்திகரமாக இருக்கும். பயணங்கள் சாதகமான பலன் தரலாம். தொழில் வியாபாரத்தில் வசூலாக வேண்டிய கடன் பாக்கிகள் வசூலாகும். வியாபாரத்தில் மன நிறைவு காண்பீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு அலைச்சலுக்கு பிறகு கடினமான காரியம் கூடகைகூடும்.




மீனராசி அன்பர்களே! எதையும் ஒரு முறைக்கு பலமுறை ஆராய்ந்து முடிவு எடுக்க வேண்டியது அவசியம். காரியங்களில் தடைதாமதம் உண்டாகலாம். முயற்சிகளில் உடனடியாக பலன் காண்பது அரிது. வாகனங்களில் செல்லும் போதும், ஆயுதங்களை கையாளும் போதும் கவனம் தேவை. சகோதரர்கள் வழியில் ஏதேனும் பிரச்சனை வரலாம். தொழில் வியாபாரம் செய்பவர்கள் குறைவான லாபம் வரக் காண்பர்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

# தமிழ் பொது வேட்பாளர்:-

(19ம் பக்கத் தொடர்ச்சி) விட பின் தங்கிய நிலையில் இருந்த ஏனைய இலங்கைச் சமூகத்தினர் இன்று தம்மை முன்னேற்றியுள்ளனர். தமிழர்கள் அவர்களைப் பார்த்து உள்ளுக்குள் புகைந்து கொண்டிருக்கும் அளவுக்கே நிலைமை உள்ளது. அப்படிப் புகைந்து கொண்டிருப்பதால் பயனில்லை. அறிவையும் ஆற்றலையும் பயன்படுத்தி தாம் முன்னேறிக் கொள்ள வேண்டியதே அவசியம். அதை விட்டு விட்டு இப்படியே அடுத்தவரில் பழி சொல்லிக் கொண்டும் உள்ளே புகைந்து கொண்டுமிருந்தால் அதிமுட்டாள்தனமாக வரலாற்றில் முடிவடைய வேண்டியது தான்.

தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற முடிவு மட்டுமல்ல, அந்த வழியிற் சிந்திக்கும் அனைத்து முடிவுகளும் அப்படித்தான் உள்ளது.எவர் ஒருவர் தொடர்ந்து வளர்ச்சியை நோக்கி மாறுகிறாரோ அவரிடம் தான் மாற்றத்தைப் பற்றிப் பேச முடியும். அவருடன் மட்டுமே மாற்றத்துக்காக இணைந்து செயற்பட முடியும். தலைமுறை தலைமுறையாக ஒரு மாற்றமும் பெறாதவர்கள். மாற்றத்தை உருவாக்குவதைப் பற்றிச் சிந்திக்காதவர்கள், தமக்குள் வளர்ச்சியடையாதவர்கள் தான் மாற்றங்கள் குறித்து அதிகமாகப் போதனைகளைச் செய்கிறார்கள்.

பொருளாதாரம், பதவி போன்றவற்றைத் தவிர, இவர்களுடைய வாழ்விலும் சிந்தனையிலும் பழக்கத்திலும் எந்த மாற்றமுமில்லை. ஆனால் இவர்கள் தான் வழி மறித்து, மாற்றம் பற்றி தீவிரமாகப் போதிக்கிறார்கள். உன்னை, உன் வாழ்வை உன்னால் மாற்ற முடியவில்லையெனில் எதனை நீ மாற்றுவாய்? என்று நாம் கேட்க வேண்டும். இப்போது இன்னொரு வாய்ப்பான காலம் வந்துள்ளது.

9 ஆவது ஜனாதிபதித் தேர்தல் அந்த வாய்ப்பைக் கொண்டு வந்திருக்கிறது. இதனைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அதற்கான கூர்மையான அவதானிப்போடு, முறையான உரையாடல்களை நிகழ்த்தி, நிதானமான இறுதித் தீர்மானத்தை எடுக்க வேண்டும். அப்படி எடுக்க முடியும்.

சிங்களத் தரப்பிலும் தமிழ்த்தரப்பை நோக்கி இறங்கி வரக்கூடிய வர வேண்டிய – சூழல் இது. அதற்கான சாத்தியக் கதவுகளைத் திறந்து வைத்திருப்பது அவசியம். ஆனால், இங்கே நடந்து கொண்டிருப்பது, கதவுகளை மூடும் காரியமல்லவா!

தமிழ்ப்பொது வேட்பாளர் என்பதே கதவுகளை மூடும் செயலன்றி வேறென்ன? உலகத்தில் இந்த மாதிரி முட்டாள்தனமான வேலையை வேறு எந்தச் சமூகமாவது செய்யுமா?

தமிழ் மக்களைத் தமிழ்த் தரப்பினரே தோற்கடிக்கும் முட்டாள்தனத்தை (அவர்கள் இதை அதி புத்திசாலித்தனம், அதி விவேகம் என்றுதான் கருதிக் கொண்டிருக்கிறார்கள்) இத்துடனாவது நிறுத்துவது நல்லது. தங்களைப் புத்திஜீவிகளாகக் கருதிக் கொண்டிருக்கும் இவர்கள் மெய்யாகவே புத்திஜீவிகள் தானென்றால் தமிழ்ச் சமூகம் அரசியல், பொருளாதாரம், பண்பாடு, சமூகம் என்ற அடிப்படையில் வளர்ச்சியை எட்டுவதற்குப் பாடுபட வேண்டும். அதற்குரிய திட்டங்களை வகுத்துக் காட்ட வேண்டும். அதை விடுத்து, இந்த மாதிரி பழைய வாய்ப்பனை திரும்பவும் எண்ணைச் சட்டிக்குள் போட்டு எடுக்கத் தேவையில்லை.

தோல்வி ஒரு போதுமே பெரிதல்ல. தோற்றுக் கொண்டேயிருப்பதுதான் பெரிது. அதுவே மிகப் பெரிய துயரமும் அவலமும்.

# 1983 யூலை இனக்கலவரத்திற்கான மன்னிப்பும் சிங்கள அரசியலும்!

(18ம் பக்கத் தொடர்ச்சி) நோக்கத்தோடு முன் வைக்கப்பட்டதாக தென்படவில்லை. மாறாக தென் இலங்கை அரசியல்வாதிகளின் நலனைப் பூர்த்தி செய்யும் நகர்வாகவே தெரிகிறது. இதனையே கடந்த காலம் முழுவதும் தென் இலங்கை ஆட்சியாளர்களும் அதற்கு செவிசாய்க்கும் ஏனைய தரப்புக்களும் மேற் கொண்டுள்ளன. அதனையே தற்போதைய ஆட்சியாளர்களும் கையாண்டு வருகின்றனர்.

# வரலாற்றுப் பதிவும் உலக அணுவாயுதப்

(16ம் பக்கத் தொடர்ச்சி) நாடுகளின் மூலமாக, இந்த உலகம் இன்னும் ஒரு மாபெரும் அழிவினை, சந்திக்கக் கூடாது என்பதில் உறுதியாக இருத்தல் அவசியம். இதற்கு நல்ல உதாரணம் தான் ஜப்பானிய தேசம்.

ஹிரோஷிமா நகரம் முழுவதும் அழிவடைந்திருந்தாலும், அந்நாடு அதனால் துவளவில்லை. தன்னம்பிக்கைக்கு உதாரணமாக விளங்குவது ஜப்பானிய தேசம். ஜப்பான் இன்று உலக நாடுகளில் பல்வேறுத் துறைகளிலும் முன்னணி வகித்து, உலகத்துக்கே ஒரு முன்னுதாரணமாகத் திகழ்கின்றது.

போர் சூழல் அற்ற, அமைதியான உலகத்தில் அன்புடனும் கருணையுடனும் பண்புடனும் வாழ வேண்டுமென நாம் அனைவரும் பிரார்த்திப்போமாக! நாடுகள் தோறும் உறவே வருக பகையே வரவேண்டாம் சமாதானமே சமாதானமே தழுவுகின்றேன் உன்னை தர்மதேவனே தர்மதேவனே சரணடைந்தேன் உன்னை அமைதிப் புறாவே அமைதிப் புறாவே அழைக்கின்றேன் உன்னை என்ற கவியரசு கண்ணதாசனின் கவியினை நினைவுகூர்வது இச்சந்தர்ப்பத்தில் பொருத்தமாகும்.


கனடாவில் வசிக்கும் 30 வயது
PHD வரை படித்த
மணமகளுக்கு
பொருத்தமான மணமகனை
எதிர்பார்க்கின்றோம்.
தரகர்களும் தொடர்புக்கொள்ளலாம்.
To Contact :
+1 647 709 1761 | +1 647 709 1536
leo.leofinance@ gmail. Com

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Sasitharan Law Professional Corporation
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

### Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

### Family Law
- Divorce
- Custody & Support

### Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

### Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

### Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases



Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

# Serving the Tamil Community OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து
தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள்
பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம்.
அனுபவத்துடன் கூடிய அன்பான
சேவையை வழங்குகின்றோம்.

## *At Need Funeral Arrangements*

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial* • *Cremation*



**Vilosanan Sivatharman**
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா
நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com













# மன்னாரில் கைதான வைத்தியர் அர்ச்சுனா பிணையில் விடுதலை! நீதிக்காக 6 பேரும் அநீதிக்கு ஆதரவாக 22 சட்டத்தரணிகளும் ஆஜர்!





மன்னாரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த வைத்தியர் அர்ச்சுனா 07 ஆகஸ்ட் 2024 புதன்கிழமை மன்னார் நீதி மன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதை யடுத்து அவரை சரீர பிணையில் விடுதலை செய்ய நீதவான் உத்தர விட்டார்.

கடந்த 02 ஆகஸ்ட் 21024 வெள்ளிக் கிழமை இரவு மன்னார் பொது வைத் தியசாலைக்குள் நுழைந்து குழப்ப த்தை ஏற்படுத்தியதாக மன்னார் வைத்தியசாலை நிர்வாகம் மன்னார் பொலிஸ் நிலையத்தில் மேற்கொண்ட முறைப்பாட்டைத் தொடர்ந்து மறுநாள் சனிக்கிழமை காலை வைத் தியர் அர்ச்சுனா மன்னார் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட வைத்தியர் அர்ச்சுனா விசாரணைகளின் பின்னர் மன்னார் நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் அவரை 07 ஆகஸ்ட் 2024 வரை விளக்கமறிய லில் வைக்க நீதவான் உத்தரவிட்டார்.

இந்த நிலையில் மீண்டும் வைத்தியர் அர்ச்சுனா 7 ஆகஸ்ட் 2024 புதன் கிழமை மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்ட நிலையில் அவரை சரீர பிணையில் விடுதலை செய்ய நீதவான் உத்தரவிட்டார். இந்த நிலையில் வைத்தியரை பார்வையிடுவதற்றகாக மாவட்டத்தின் பல பாகங்களில் இருந் தும் பல நூற்றுக்கணக்கான மக்கள் நீதிமன்ற பகுதியில் சூழ்ந்து கொண டமையை அவதானிக்க கூடியதாக இருந்தது. அண்மையில் மன்னார் தம்பன்னை குளத்தை சேர்ந்த இளம் தாய் ஒருவர் மரணம் அடைந்த சம்பவம் தொடர்பில் தகவல் சேகரிக்க வந்த நிலையில் வைத்திய செயற் பாட்டு வைத்தியர்கள் மற்றும் சுகாதர ஊழியர்களின் சேவைக்கு இடையூறு ஏற்படுத்தியதாக மேற் கொள்ளப்பட்ட முறைப்பாட்டை தொடர்ந்து வைத்தி யர் அர்ச்சுனா கைது செய்யப்பட்டு மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டமை குறிப்பிடத் தக்கது.

இதேவேளை மன்னாரில் 22 சட்டத்தரணிகள் மன்னார் நீதிமன்றில் ஆஜராகி அர்ச்சனாவை பிணை கொடுக்கக் கூடாது வெளியே விடக் கூடாது என்ற கோரிக்கைகளை முன் வைத்து வாதாடினார்கள்.

மன்னாரில் ஒரு குறிப்பிட்ட மதம் சார்ந்தவர்கள் ஒன்று சேர்ந்து இந்தச் சட்டத்தரணிகளை வழக்கு விசார ணைக்கு அமர்த்தியதாகத் தெரிய வருகின்றது. ஒரு அரசியல்வாதி உட் பட. அந்த அரசியல்வாதி மன்னார் வைத்தியசாலைக்குச் சென்று அங்கே இருக்கும் டாக்டர்களுடன் சேர்ந்து தேநீர் அருந்தி குதூகளித்து வந்தார் இறந்து விட்ட அந்த இளம் தாய்க் காக நீதி கேட்க டாக்டர் அர்ச்சனா வுக்காக ஆறு சட்டத்தரணிகள் ஆஜ ராகி 22 சட்டத்தரணிகளின் வாதங் களை முறியடித்துஅவரை பிணையில் வெளியே எடுத்தனர் என்பது குறிப் பிடத்தக்கது.

